பக்கங்கள்: 17 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2051 மார்கழி 07 செவ்வாய்க்கிழமை 22.12.2020 கதிர் 47

இது ரகசியம் அல்ல!

அதிகாரப் பகிர்வுக்கு வழி செய்யும் மாகாணசபை முறைமையை அடியோடு ஒழிக்கும் தனது ஒரே குறிக்கோளை நிறைவு செய்வதற்கு எல்லாவித வழிமுறைகளையும் கொழும்பு அரசு – பௌத்த, சிங்களப் பேரினவாத ஆட்சிப் பீடம் – முழுமையாக பக்கம்02

# தமிழ்த் தேசியக் கட்சிகள் ஒன்று சேர்ந்து ஜெனிவாவில் அரசை மிரட்டவே முடியாது



## இப்படிக் கூறுகின்றார் வெளிவிவகார அமைச்சர் தினேஷ்

தமிழ்த் தேசியக் கட்சிகள் ஒன்று சேர்ந்து ஜெனிவாவில் இலங்கை அரசை மிரட்ட முடியாது என வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான புதிய அரசு, இலங்கைக்கு எதிரான ஐ.நா. தீர்மானங்களின் இணை அனுசரணையிலிருந்து இவ்வருடம் விலகிவிட்டது. அந்தத் தீர்மானங்களின் காலவரையறையும் நிறைவடைந்துவிட்டது. அந்தத் தீர்மானங்கள் இரண்டும் மரணித்துப் போனமைக்குச் சமமாகும்.

இந்தநிலையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஐ.நா. பக்கம் 02

## மஹியங்கனையில் நேற்று மீன் மழை

மஹியங்கனை பிரதேசத்தில் மீன் மழை பெய்துள்ளதாக வளிமண்டலவியல் திணைக்களத்தின் பணிப்பாளர் அத்துல கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் ஏற்பட்ட மழைப் பொழிவுடன் மீன்களும் விழுந்துள்ளன என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

தற்போது நாட்டின் அநேக இடங்களில் காணப்படும் மழை மற்றும் சிறு சூறாவளியுடன் கூடிய காலநிலை நிலவுகின்றமையால் பக்கம் 02

# இலங்கை – இந்திய ஒப்பந்தம் காலாவதி

## அமைச்சர் சரத் வீரசேகரா பிரகடனம்



கொழும்பு, டிசெம்பர் 22

இலங்கை – இந்திய ஒப்பந்தம் செத்துச் செயலிழந்து, காலாவதியாகி விட்டது.

–இவ்வாறு பகிரங்கமாக அறிவித்திருக்கின்றார் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ரியர் அட்மிரல் சரத் வீரசேகரா. பக்கம் 02

## ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 11 பேருக்குக் 'கொரோனா'

லிந்துலை சுகாதார மருத்துவ காரியாலயத்துக்குட்பட்ட பிரிவில் 15 கொரோனா நோயாளிகள் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர். அவர்களில் ஒரே குடும்பத்தில் 11 பேர் பாதிப்படைந்துள்ளனர்.

டயகம மேற்கு தோட்டத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 11 பேருக்கும், அக்கரப்பத்தனை நியூ போர்ட்மோர் தோட்டத்தைச் சேர்ந்த மூன்று பேருக்கும், லிந்துலை வோல்ட்ரீம் தோட்டத்தைச் சேர்ந்த பக்கம் 02

## முஸ்லிம் தேசிய ஒளிபரப்பை உடன் தடை செய்ய வேண்டும்

### ஊடகத்துறை அமைச்சில் ஞானசார தேரர் முறையீடு



இலங்கை ஒளிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் ஒரு பிரிவாகச் செயற்பட்டு வருகின்ற முஸ்லிம் தேசிய ஒளிபரப்பை உடனடியாகத் தடைசெய்யக் கோரி பொதுபலசேனா அமைப்பு, ஊடகத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவிடம் நேற்று கோரிக்கை விடுத்துள்ளது. பக்கம் 02

## மருதனார்மடம் கொத்தணி: 93 நேற்றும் மூவருக்குத் தொற்று!

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்.மருதனார்மடம் கொரோனா வைரஸ் கொத்தணியில் நேற்று மூவர் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

யாழ். போதனா வைத்தியசாலை ஆய்வுகூடத்தில் நேற்று 383 பேருக்கு பி.சி.ஆர். பரிசோதனை செய்யப்பட்டது. இதன்போதே மூவருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. பக்கம் 02

## உயர்நீதிமன்றக் கட்டடத் தொகுதியில் சிகரெட்டினால் தீப் பரவல் ஏற்பட்டதா?



கொழும்பு உயர் நீதிமன்றக் கட்டிடத் தொகுதியில் தீ பரவிய விதம் தொடர்பான தகவல்கள் தற்போது வெளியாகியுள்ளன.

தென்னிலங்கை ஊடகம் ஒன்று இந்தச் செய்தியை வெளியிட் பக்கம் 02

## 46 லட்சம் ரூபா பெறுமதியான கேரளக் கஞ்சா பொதிகள் மீட்பு!

### மன்னாரில் சந்தேகத்தில் இருவர் கைது



(ந.லோகதயாளன்)

மன்னார் – யாழ்ப்பாணம் ஏ - 32 பிரதான வீதியில் 91ஆம் கட்டைப் பகுதியில் அடம்பன் பொலிஸாரால் சுமார் 46 இலட்சம் ரூபா பக்கம் 02

## இலங்கையில் நேற்றும் 364 பேருக்குத் தொற்று!

இலங்கையில் நேற்றும் 364 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று கொரோனாத் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையம் தெரிவித்துள்ளது.

இதையடுத்து நாட்டில் மொத்தத் தொற்றாளர்களின் எண்ணிக்கை 37 ஆயிரத்து 631 ஆக அதிகரித்துள்ளது. இவர்களில் 33 ஆயிரத்த 954 பேர் கொரோனாவின் மூன்றாவது அலையில் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மொத்தத் தொற்றாளர்களில் 28 ஆயிரத்து 682 பேர் குணமடைந்துள்ளனர். பக்கம் 02

## விபத்தில் தகப்பன்,மகன் பலி மோ. சைக்கிள் துண்டானது!

பிலியந்தலையில் தனது நான்கு வயது குழந்தையையும் மனைவியையும் ஏற்றிக் கொண்டு மோட்டார் சைக்கிளில் சென்ற போது ஏற்பட்ட விபத்தில் குறித்த குழந்தையும் தந்தையும் உயிரிழந்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர். பக்கம் 02

## கைதடியில் 4 பேர் படுகாயம்!

கைதடி சரஸ்வதி சனசமூக நிலையத்துக்கு அருகாமையில் நேற்று மாலை 5:30 மணியளவில் இடம்பெற்ற விபத்தில் நால்வர் படுகாயமடைந்துள்ளனர்.

மோட்டார் சைக்கிளில் பக்கம் 02

### மஹிந்த அணியால் அதிருப்தியடைந்துள்ள

## மைத்திரி தரப்பினருக்கு சஜித் அணியினர் அழைப்பு



முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குத் தேவையேற்படின் தமது அணியுடன் இணைந்து பயணிக்கலாம் என்று எதிர்க்கட்சித் பக்கம் 11



## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

முன்னெடுத்து வருகின்றது என்பதை கடந்த சில வாரங்களாக அடுத்தடுத்து இப்பத்தியில் கோடிகாட்டி வருகிறேன். பௌத்த – சிங்கள பேரினவாதத் தரப்புகளைக் கொண்டு இதற்கான ஒரு கிளர்ச்சியை பெருத்த எடுப்பில் முன்னெடுத்து வருகின்றது மொட்டுத்தரப்பு.

அதன் அடுத்த கட்டம் இப்போது கட்டவிழ்கின்றது.

ராஜபக்ஷக்களின் எதிர்பார்ப்பை – விருப்பை – நிறைவு செய்யும் வகையில் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தன் பங்குக்கு இந்த விடயத்தில் 'கீழ்த்தர' காய் நகர்த்தலை இப்போது ஆரம்பித்துள்ளது.

மாகாணங்களுக்குப் பகிரப்பட்ட அதிகாரங்களில் முக்கியமானது சுகாதாரத் துறை. பெரும்பாலும் வைத்தியசாலைகள், மருந்தகங்கள் எல்லாம் மாகாண சபைகளின் கீழ்தான் உள்ளன.

இப்போது அதற்கு எதிராகப் போராட்ட ஆயுதம் தூக்கியிருக்கின்றது அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் – ராஜபக்ஷக்களின் நோக்கத்தை மறைமுகமாக முன்னெடுக்கும் இலக்கில்.

தங்களையும் உள்ளடக்கிய சுகாதாரத் துறையை மாகாணசபைகளில் இருந்து நீக்கி மத்திய அரசுக்கு மாற்றாவிட்டால் வேலை நிறுத்தம் உட்பட பல போராட்டங்களில் தாங்கள் ஈடுபடப்போகின்றார்கள் என்று அரசுக்கு எச்சரிக்கை நோட்டீஸ் கொடுத்திருக்கின்றது அச்சங்கம்.

தெட்டத் தெளிவாக – வெட்டவெளிச்சமாக – அதிகாரப் பகிர்வு முறையை சிதறடிப்பதற்கான சிங்களப் பேரினவாதத்தின் மேலாண்மைத் திமிர்மிக்க நகர்வு இது.

'வலிமை மிக்க அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தினர் ஒற்றைக் காலில் – பிடிவாதமாக – நிற்கின்றனர், இதற்கு இணங்காவிட்டால் சுகாதார சேவையே ஸ்தம்பித்து விடும்' என்று சாட்டுக் கூறி, மாகாணசபைகளிடமிருந்து சுகாதாரத் துறை அதிகாரங்களையும் பிடுங்கி, ஏற்கனவே அதிகார நலிவில் படுத்துக் கிடக்கும் மாகாணசபைகளை அதிகாரமற்ற எலும்புக் கூடாக்கி விடும் பௌத்த – சிங்களப் பேரினவாத அரசின் சதித் திட்டமே இது. அதற்கு அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் துணை போகின்றது. அவ்வளவுதான்.

எனக்குப் பழைய நினைவுகள் நிழலாடுகின்றன. 2006 இல் என்று நினைக்கிறேன். இன்று இனசௌஜன்யம் குறித்து மேதாவிகள் போல மக்களுக்கு உபதேசம் செய்து, பாடம் எடுக்கும் ஜே.வி.பியினர் வடக்கு – கிழக்கைப் பிரிக்க வேண்டும் எனக் கோரி உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தனர். அதற்கான ஏற்பாடுகள் நடந்த போதே நான் பணியாற்றிய பத்திரிகை மூலம் நேரத்துடன் அதனை எச்சரித்தேன். 'நீதிமன்றம் கூறியது, அதனால் பிரிக்கின்றோம்' – எனத் தெரிவித்துத் தமிழர் தாயகத்தைப் பிரிக்கப் போகின்றார்கள் என்று பல ஆசிரிய தலையங்கங்கள் எழுதினோம். இந்தியத் தரப்பையும் எச்சரித்தோம். நீங்கள் வற்புறுத்தி – வலியுறுத்தி – கொண்டு வந்த வடக்கு, கிழக்கு இணைப்பை நீதிமன்றத்தைக் காட்டிப் பிரிக்கப் போகின்றார்கள் ராஜபக்ஷக்கள் என்றோம். அப்படி எல்லாம் நடக்காது என்றனர் இந்திய இராஜதந்திரிகள். ஆனால் கடைசியில் என்ன நடந்தது? பதினேழு வருடங்களாக நீடித்த வடக்கு – கிழக்கு இணைப்பு நீதிமன்றத்தின் பெயரினால் பிரிக்கப்பட்டு பதினான்கு ஆண்டுகள் கடந்துவிட்டன. புதுடில்லியால் ஒன்றும் பிடுங்கவே முடியவில்லை.

இப்போதும் அதுதான் நடக்கப்போகின்றது. மாகாணசபையிடம் மிச்ச சொச்சமாக இருக்கும் அதிகாரப் பகிர்வில் முக்கியமானது சுகாதாரத்துறை. அதையும் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தைக் காட்டிப் பிடுங்கப் போகின்றார்கள். அந்த அதிகாரப் பகிர்வை இலங்கை – இந்திய ஒப்பந்தம் மூலம் கொண்டு வந்த புதுடில்லி இப்போதும் தமிழர்களுடன் சேர்ந்து கையாலாகாத்தனத்துடன் வானத்தைப் பார்த்துக்கொண்டு வாளாவிருக்க வேண்டியதுதான்!

சரி.,அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்துக்கு இங்கு கழுவிக் கொடுத்துக் கொண்டிருக்கும் நமது தமிழ் மருத்துவர்கள் என்ன கூறப்போகின்றார்கள்? அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் இந்தச் செயற்பாடு, இனவாதத்தை வெளிப்படுத்தும் நடவடிக்கை அல்ல என்று தமது மனச்சாட்சிக்கு விரோதமாகக் கருத்து நிலைப்பாட்டை முன்வைத்துப் பதிலளித்துப் பிரசாரம் செய்து, தமது வயிற்றுப் பிழைப்பைப் பார்த்துக் கொள்வார்களா? அல்லது நியாயத்தின் பக்கம் நின்று, இந்தப் பேரினவாதத்துக்கு எதிராகக் கிளர்ந்து எழுவார்களா?

தமிழினம் அவர்கள் ஒவ்வொருவரின் நடவடிக்கைகளையும் – பிரதிபலிப்பையும் – கூர்ந்து கவனித்துக் கொண்டிருக்கின்றது என்பதை அவர்கள் மறக்காமல் இருப்பது நல்லது...!

– மின்னல் –

## மருதனார்மடம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கோப்பாயில் ஒருவருக்கும் (மருதனார் மடம் சந்தைப் பகுதிக்குச் சென்று வந்தவர்), ஊர்காவற்துறையில் ஒருவருக்கும் (மருதனாமடம் சந்தைப் பகுதிக்குச் சென்று வந்தவர்), இணுவிலில் ஒருவருக்கும் (ஏற்கனவே தொற்றுடன் அடையாளம் காணப்பட்டவருடன் தொடர்பில் இருந்தவர்) இவ்வாறு உறுதி செய்யப்பட்டுள்ளது என வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மேலும் கூறினார்.

இதையடுத்து மருதனார்மடம் கொத்தணியில் தொற்றுக்குள்ளானவர்களின் எண்ணிக்கை 93 ஆக அதிகரித்துள்ளது.

## இலங்கையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

8 ஆயிரத்து 773 பேர் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். அத்துடன் 176 பேர் உயிரிழந்துள்ளனர்.

## ஒரே குடும்பத்தைச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஒருவருக்கும் தொற்று அடையாளம் காணப்பட்டுள்ளது எனச் சுகா தார அதிகாரிகள் தெரிவித்தனர்.

அந்தவகையில், டயகம மேற்கு 4ஆம் பிரிவு தோட்டத்துக்குக் கடந்த 11ஆம் திகதி கொழும்பிலிருந்து வருகை தந்த சமயத் தலைவர் ஒருவருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

கொழும்பிலிருந்து வருகை தரும் போது கினிகத்தேனை களுகல பகுதியில் அவருக்குப் பி.சி.ஆர். பரிசோதனை செய்துள்ளனர்.

இதையடுத்து, அவர் டயகம மேற்கு 4ஆம் பிரிவு தோட்டத்தில் அவரின் உறவினர் வீட்டில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்டது மட்டுமன்றி அப்பகுதியில் நடைபெற்ற பூஜை வழிபாடுகளிலும் பங்கேற்றுள்ளமை விசாரணையின் மூலம் தெரியவந்துள்ளது.

அதன்பின்னர் அப்பகுதியில் உள்ள 10 குடும்பங்களைச் சேர்ந்த 50 இற்கும் மேற்பட்டவர்கள் தனிமைப்படுத்தப்பட்டிருந்தனர்.

இதில் கடந்த 14ஆம் திகதி குறித்த மதத்தலைவரின் உறவினர் வீட்டில் இருந்த 12 பேருக்கு பி.சி.ஆர். பரிசோதனை செய்யப்பட்டது. இதில் 11 பேருக்குக் கொரோனாத் தொற்று இருப்பது நேற்று கண்டறியப்பட்டது.

ஏனைய பகுதிகளில் உள்ள தொற்றாளர்கள் கொழும்புப் பகுதிகளிலிருந்து வருகை தந்துள்ளனர் என்று சுகாதார அதிகாரிகள் தெரிவித்தனர்.

இவர்களுடன் தொடர்பில் இருந்தவர்களும், குடும்ப உறுப்பினர்களும் வீடுகளிலேயே தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டவர்கள் கொரோனா வைரஸ் தொற்று சிகிச்சை நிலையங்களுக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

## கைதடியில் 4 பேர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கைதடி நோக்கி மூவர் பயணித்துள்ளனர். அதே திசையில் சைக்கிளில் வயோதிபர் ஒருவர் பயணித்த நிலையில், அவர் வலது புறமாகத் திருப்ப முற்பட்ட வேளை இவ் விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த மூவரும், சைக்கிளில் பயணித்த வயோதிபருமாக நால்வர் படுகாயமடைந்தனர்.

விபத்துக்குள்ளானவர்களை அயலவர்கள் மற்றும் வீதியால் பயணித்தவர்கள் மீட்டு 1990 அவசர அம்புலன்ஸ் சேவை மூலம் வைத்தியசாலையில் சேர்த்தனர்.

## விபத்தில் தகப்பன்,...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மிரிஹான சாலாவ வீதியைச் சேர்ந்த பிரதீப் உதய குமார (32) மற்றும் அவரது மகன் சதெவ் அபிராஸ் (வயது 4) ஆகியவர்களே இந்த விபத்தில் உயிரிழந்துள்ளனர்.

நேற்றுக்காலை ஹொரணை–கொழும்பு வீதியின் ஜாலியகொட பிரதேசத்தில் இரண்டு மருங்குகளை பிரிப்பதற்காக வீதியின் நடுவில் வைக்கப்பட்டிருந்த பாரிய பூச்சாடியில் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் குமோட்டார் சைக்கிள் இரண்டு துண்டுகளாக உடைந்துள்ளது.விபத்தில் காயமடைந்த தாய் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## தமிழ்த் தேசியக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

உறுப்புரிமை நாடுகளுடன் பேச்சு நடத்தி எதிர்வரும் மார்ச் மாதம் ஜெனிவா அமர்வில் இலங்கைக்கு எதிராகப் புதிய பிரேரணை கொண்டு வருவதன் மூலம் செத்துப்போன அந்தத் தீர்மானங்களைப் புதுப்பிக்க முடியாது. அதேவேளை, புதிய பிரேரணையை நிறைவேற்றினாலும் அதற்கு இலங்கை இணை அனுசரணை வழங்காது. அந்தப் பிரேரணையும் வலுவிழந்துதான் போகும்.

தமிழ்த் தேசியக் கட்சிகள் ஒன்று சேர்ந்து ஜெனிவா விவகாரத்தைக் கையாளும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமை விடுத்துள்ள அறிவிப்பு நகைப்புக்கிடமானது. இந்தக் கட்சிகள் ஒன்று சேர்ந்து ஜெனிவாவில் இலங்கை அரசை மிரட்ட முடியாது.

இலங்கை மீது புதிய பிரேரணை வந்தாலும் அதை எமது நட்பு நாடுகள் எதிர்த்தே தீரும். நாமும் அந்தப் பிரேரணைக்கு இணை அனுசரணை வழங்காமல் அதையும் வலுவிழக்கச் செய்வோம்.

தமிழர் பிரச்சினைகளுக்கு உள்நாட்டில்தான் தீர்வு கிடைக்கும். ஐ.நா. உள்ளிட்ட சர்வதேச சமூகம் தமிழருக்கு ஒருபோதும் தீர்வைப் பெற்றுத்தராது. இதை இன்னமும் தமிழ்த் தேசியக் கட்சிகள் நம்பாமல் இருப்பது சிறுபிள்ளைத்தனமாது – என்றார்.

## முஸ்லிம் தேசிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அந்த அமைப்பைச் சேர்ந்த பொதுச்செயலாளரான கலகொட அத்தே ஞானசார தேரர், கொழும்பிலுள்ள ஊடக அமைச்சுக்கு விரைந்து இந்த முறைப்பாட்டை வழங்கியுள்ளார்.

அதன் பின் ஊடகங்களிடம் பேசிய அவர் –

வஹாப்வாத, இக்குவான் இனவாதப் பிரிவு என பல்வேறு அடிப்படைவாத இஸ்லாமிய அமைப்புக்கள் இலங்கையிலும் செயற்பட்டு முஸ்லிம் மக்களைத் திசைதிருப்புகின்றன என்று நாங்கள் அடிக்கடி கூறி வந்தோம்.

ஆனாலும், அதனைப் பலரும் ஈஸ்டர் தாக்குதல் இடம்பெறும்வரை நம்பவில்லை. ஆனால், இன்று அந்தச் செயற்பாடுகள் அரச ஊடகங்களைப் பயன்படுத்தி இடம்பெறுகின்றன. அதனை அரசு விரைந்து தடுக்க வேண்டும்.

அரசிலுள்ள சில அதிகாரிகள் முஸ்லிம் பிரிவுகளிலிருந்து பணம் உட்பட பல்வேறு இலஞ்சங்களைப் பெறுவதால் இதனைத் தடைசெய்ய முடியவில்லை. இனியும் அவ்வாறு இருக்கக்கூடாது. விரைந்து இந்த முஸ்லிம் ஒளிபரப்பை தடைசெய்ய வேண்டும் – என்றார்.

## 46 லட்சம் ரூபா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பெறுமதியான கேரளக் கஞ்சா பொதிகள் மீட்கப்பட்டன.

மன்னார் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பன்டுள்ள வீரசிங்கவின் பணிப்பில் அடம்பன் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி லக்ஸ்மன் ரணவல ஆராய்ச்சி தலைமையிலான பொலிஸ் குழுவினர் மன்னார் – யாழ்ப்பாணம் ஏ – 32 பிரதான வீதியில் நேற்றுமுன்தினம் பயணித்த டொல்பின் ரக வாகனத்தை சோதனைக்கு உட்படுத்தினர்.

இதன்போது சூட்சுமமான முறையில் அந்த வாகனத்தின் இருக்கைகளினுள் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் 14 கிலோ 600 கிராம் கேரளக் கஞ்சா பொதிகள் மீட்கப்பட்டதோடு, மன்னார் சாந்திபுரத்தைச் சேர்ந்த 34 வயதுடைய சாரதி கைது செய்யப்பட்டார்.

அவரிடம் மேற்கொள்ளப்பட்ட மேலதிக விசாரணையில் விடத்தல்தீவு மீன் வாடிப் பகுதியில் 5 கிலோ 95 கிராம் மீட்கப்பட்டது.

அதைத்தொடர்ந்து பொலிஸ் மோப்ப நாயின் உதவியுடன் நடத்திய தேடுதலில் அப்பகுதியில் இருந்து 26 கிலோ 790 கிராம் கேரளக் கஞ்சா பொதிகளுடன் 48 வயதுடைய சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

பொலிஸாரின் விசேட சோதனை நடவடிக்கைகளின்போது சுமார் 46 கிலோ 485 கிராம் கேரளக் கஞ்சாவும் அதனைக் கொண்டு செல்லப் பயன்படுத்திய வாகனமும் கைப்பற்றப்பட்டது.

## மஹியங்கனையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இவ்வாறான மீன் மழை பெய்யக்கூடிய சாத்தியக்கூறு இருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

## இலங்கை - இந்திய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அம்பாறையில் நேற்று மாவட்ட சிவில் பாதுகாப்பு அதிகாரிகளைச் சந்தித்துப் பேசிய போதே அவர் இதனைக் கூறியிருக்கின்றார்.

சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் ரியர் அட்மிரல் ஆனந்த பீரிஸும் ஏனைய அதிகாரிகளும் இந்நிகழ்வில் கலந்து கொண்டிருந்தனர்.

"உடன்பாட்டின்படி இந்தியா பல நிபந்தனையை நிறைவேற்ற வேண்டும். ஒன்று – புலிகளின் ஆயுதங்களைக் களைதல். இரண்டாவது – நாட்டில் இன்னொரு யுத்தம் கட்டவிழாமல் இருப்பதை உறுதி செய்தல். மூன்றாவது – வடக்கில் வாழ்ந்தோரை மீளக் குடியமர்த்துதல்.

"இந்த மூன்று நிபந்தனைகளையும் நிறைவு செய்வதில் இந்தியா தோல்வி கண்டு விட்டது.

"ஆகையினால் இந்திய – இலங்கை ஒப்பந்தம் இனிமேல் செல்லுபடியற்றது. அது செயற்பாட்டில் இல்லை. எனவே, இந்த ஒப்பந்தத்தின் கீழ் உருவாக்கப்பட்ட மாகாண சபைகளுக்கும் அதே நிலைமைதான்.

"ஆகவே அரசமைப்பின் மூலமோ, மாகாண சபைகள் மூலமோ நாடு வேறு யாரிடமும் ஒப்படைக்கப்படமாட்டாது." – இப்படி அவர் அங்கு மேலும் கூறினார்.

## உயர்நீதிமன்றக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

டுள்ளது. அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:–

உயர்நீதிமன்றக் கட்டடத் தொகுதியில் சிகரட்டினால் தீ பரவியுள்ளமை ஆரம்ப கட்ட விசாரணைகளின் ஊடாகக் கண்டறியப்பட்டுள்ளது.

உயர்நீதிமன்றத்தின் மேல் மாடியில் சட்டத்தரணிகளினாலோ அல்லது ஊழியர்களினாலோ வீசப்பட்ட சிகரட்டினாலேயே, தீ பரவியிருக்கக்கூடும் என்ற விதத்தில் சி.சி.ரி.வி. ஊடாக விசாரணைகள் நடத்தப்பட்டு வருகின்றன.

கடந்த 15ஆம் திகதி உயர்நீதிமன்றக் கட்டடத் தொகுதியில் பாரிய தீ பரவியிருந்தது.

இந்தத் தீ விபத்தானது திட்டமிட்ட செயலாக இருக்காது என அரச பகுப்பாய்வாளர்களின் விசாரணைகளின் ஊடாக தெரியவந்துள்ளது.

இந்தத் தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டதன் பின்னர், அங்கு நடத்தப்பட்ட தேடுதல் நடவடிக்கைகளில் 4 சிகரெட் துண்டுகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

உயர்நீதிமன்றக் கட்டடத் தொகுதியில் சிகரெட் புகைப்பதற்கான குறித்த இடத்தில் தீ பரவக்கூடிய வகையிலான பொருள்கள் இருந்துள்ளனஎன்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்தச் சிகரெட் புகைத்தவர்கள் தொடர்பான தகவல்களைத் திரட்டுவதற்காக மேலும் 30 பேரிடம் விசாரணைகள் நடத்தப்பட்டுள்ளன.

இதுவரை விசாரணை செய்யப்பட்ட 30 பேரும், சிகரெட் புகைப்பதில்லை என விசாரணைகளின்போது தெரிவித்துள்ளனர். ஏனையோரிடமும் விசாரணைகள் தொடர்கின்றன – என்றுள்ளது.

# சந்திரிகா, சஜித்தின் தலைமையில் கோட்டாவுக்கு எதிராகக் கூட்டணி!

## கண்டுபிடித்தார் மஹிந்தானந்த

கொழும்பு, நவ.22

சஜித் பிரேமதாஸவுடன் எதிர்த்தரப்பினர் அனைவரும் இணைந்து ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு எதிரான பரந்துபட்ட கூட்டணியை அமைக்கவுள்ளனர் எனக் கூறுகின்றனர்.

இந்த கூட்டணியின் தலைமைத்துவத்துக்காக முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமார துங்க உள்ளிட்ட மேலும் பலர் தயாராகிக் கொண்டிருக் கிறார்கள் என்று விவசாய அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

மக்கள் சந்திப்பொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போது இதனைத் தெரிவித்த அவர் மேலும் கூறுகையில் –

தற்போது எதிர்த்தரப்பினர் பரந்துபட்ட கூட்டணி யொன்றை அமைக்கவுள்ளனர் எனக் கூறிக் கொண்டி ருக்கின்றனர். கோட்டாபய ராஜபக்ஷவுக்கு எதிரான தாக அந்த கூட்டணி அமையும் என்றும் கூறுகிறார்கள். சம்பிக ரணவக்க, அநுரகுமார திஸாநாயக்க, சுமந்திரன், ரிஷாத் பதியுதீன், ரவூப் ஹக்கீம் உள்ளிட்டோரே இந்த கூட்டணியின் அங்கத்தவர்களாவர்.

கடந்த ஐந்தாண்டு காலமாக நாட்டில் பல்வேறு ஊழல்மோசடிகளில் ஒன்றாக ஈடுபட்டவர்களேதற்போதும்



ஒன்றிணைந்துள்ளார்கள். இவர்கள் அடிப்படைவாதத் தையும் பங்கரவாதத்தையும் தூண்டியவர்களாவர். இவர்களே சஜித் பிரேமதாஸவுடன் கூட்டணி அமைக் கப் போகிறார்கள்.

இவ்வாறானதொரு கூட்டணி உருவாக்கப்படுவது எமக்கும் மகிழ்ச்சியளிக்கிறது. சம்பிக ரணவக்க, சஜித் பிரேமதாஸ, மங்கள சமரவீர, சந்திரிகா குமாரதுங்க உள்ளிட்டோர் இந்த கூட்டணியின் தலைமைத்துவத் துக்காகக் காத்துக் கொண்டிருக்கின்றனர். ஒரு கூட்ட ணியின் தலைமைத்துவதற்காக இவ்வாறு பலர் தயா ராகிக் கொண்டிருக்கிறார்கள்.– என்றார்.

# செய்ய முடியாதென்ற பலவற்றை ராஜபக்ஷக்கள் செய்து காட்டினர்!

## அமைச்சர் சி.பி. ரத்நாயக்க பெருமிதம்

செய்ய முடியாதவை என்று கூறிய பலவற்றை ராஜ பக்ஷக்கள் செய்துகாட்டினார்கள் என அமைச்சர் சி.பி. ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

நுவரெலியா மாவட்டத்தை சுற்றுலா வலயமாக அபிவிருத்தி செய்யும் திட்டத்துக்கு இணையாக கொத் மலை பிரதேசத்தை அபிவிருத்தி செய்யும் வேலைத் திட்டத்தை ஞாயிற்றுக்கிழமை ஆரம்பித்துவைத்து உரை யாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் தெரிவிக்கையில் –

எம்.சி.சி. உடன்படிக்கையில் கைச்சாத்திடாததால் நாட்டுக்கு நஷ்டம் எனவும் கடன்களைப் பெறமுடியாது என்றும் விமர்சிக்கப்படுகின்றது.

நாம் கடன் வாங்கியது போதும். தேசிய பொருளாதா ரத்தை மையப்படுத்தியே இம்முறை வரவு – செலவுத் திட்டம்கூட தயாரிக்கப்பட்டுள்ளது. கிராமங்களைக் கட்டியெழுப்புவதற்கான வாய்ப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

துறைமுகத்தை இந்தியாவுக்கோ அல்லது சீனா வுக்கோ வழங்குவதற்கு நாம் தயாரில்லை. எமது நாட்டுத் தேவைக்காகவே துறைமுகம் நிர்மாணிக்கப்பட்டது. ஆனால், கடந்த அரசாங்கம்தான் 99 வருடகால குத்த கைக்கு துறைமுகமொன்றை வழங்கியது. கடந்த ஆட் சியின்போதே பொருளாதாரமும் பாதிக்கப்பட்டது. இதனால்தான் நாட்டை முன்னோக்கி கொண்டுசெல் வதற்கு எமக்கு மூன்றிலிரண்டு பெரும்பான்மை ஆதரவு கிடைத்தது.

ஜனாதிபதித் தேர்தலின்போது கோட்டாபய ராஜபக்ஷ வெற்றிபெறமாட்டார் எனவும் அவருக்கு சிறுபான்மை யின மக்கள் வாக்களிக்கமாட்டார்கள் என்றும் கூறப் பட்டது. இந்நிலைமையும் மாற்றியமைக்கப்பட்டது.

ராஜபக்ஷக்களுக்கு யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வரமுடியாது என அன்று குறிப்பிட்டனர். ஆனால், ராஜபக்ஷக்கள் அதனைச் செய்துமுடித்தனர்.

நாட்டை அபிவிருத்தி செய்யமுடியாது எனவும் சுட்டிக்காட்டினர். எனினும் அபிவிருத்தியையும் செய்து காட்டினர். அதுமட்டுமல்லாது சிறுபான்மையினத்தவர் களின் ஆதரவின்றி தேர்தலில் வெற்றிபெறமுடி யாது என்றனர். ஆனால் ராஜபக்ஷக்கள் வெற்றிநடை போட்டனர்.– என்று தெரிவித்துள்ளார்.

# இருவேறு சம்பவங்களில் இருவர் கொலையுண்டனர்!

நாட்டில் ஞாயிற்றுக் கிழமை இடம்பெற்ற இரு வேறு சம்பவங்களில் இரு வர் கொலை செய்யப்பட் டுள்ளனர்.

கொழும்பு, பொரளை வனாத்தமுல்ல பகுதியில் கூரிய ஆயுதத்தால் தாக் கப்பட்டு நபர் ஒருவர் உயி ரிழந்துள்ளார்.

அந்நபர் தனிப்பட்ட தக ராறு காரணமாகக் கொலை செய்யப்பட்டிருக்கலாமென தெரிவிக்கும் பொலிஸார் இந்த சம்பவம் ஞாயிறு இரவு இடம்பெற்றுள்ளதா கத் தெரிவித்துள்ளனர்.

பொரளை, சரணபால மாவத்தை பகுதியை சேர்ந்த 58 வயதுடைய நபரே இவ் வாறு உயிரிழந்துள்ளார்.

இந்த சம்பவம் தொட ர்பில் சந்தேகநபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார் எனவும் மேலதிக விசார ணைகளை மேற்கொண்டு வருவதாகவும் பொரளை பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, அம்பாந் தோட்டை கண்ணொருவ பகுதியில் இரு தரப்பினர் களுக்கிடையில் ஏற்பட்ட வாக்குவாதத்தால் 27 வய துடைய இளைஞன் ஒரு வர் உயிரிழந்துள்ளார்.

இந்த கொலை சம்பவம் ஞாயிறு இரவு இடம்பெற் றுள்ள நிலையில் கொலைச் சம்பவம் தொடர்பில் நால் வர் கைதுசெய்யப்பட்டுள்ள னர்.

கைதுசெய்யப்பட்டவர் களில் இருவர் அம்பாந் தோட்டை வைத் தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் நிலையில், அம்பாந்தோட்டை பொலிஸார் மேல திக விசாரணை களை ஆரம்பித் துள்ளனர்.

# போலி நாணயத் தாள் வைத்திருந்தவர் கைது!

பொல்பித்திகம பகுதியில் போலி 5 ஆயிரம் ரூபா நாணயத்தாள் மற்றும் போலி 1000 ரூபா நாணயத்தாள்களுடன் சந்தேக நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொல்பித்திகம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மாலுவிய பகுதியில் ஞாயிறு மாலை பொலி ஸாருக்குக் கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே இந்தச் சந்தேகநபர் கைது செய்யப்பட்டார் எனப் பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. மாலு விய பகுதியைச் சேர்ந்த 31 வயதுடைய நப ரொருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

இவரிடமிருந்து 5 ஆயிரம் ரூபா பெறுமதி யான போலி நாணயத்தாள் ஒன்றும், 1000 ரூபா பெறுமதியான போலி நாணயத்தாள்கள் ஐந்தும் கைப்பற்றப்பட்டுள்ளன.

# கொரோனாத் தடுப்பூசியை பெற உலகவங்கியுடன் அரசு பேச்சு!

கொவிட் – 19 இற்கான தடுப்பூசியை கொள்வனவு செய்வதற்காக உலக வங்கியிடம் 10 பில்லியன் ரூபா (ஆயிரம் கோடி ரூபா) கடனுதவியைப் பெற்றுக் கொள் வதற்கான பேச்சுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதே வேளை ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் என்பவற்றிடமிருந்தும் நிதியுத வியைப் பெற்றுக் கொள்வது தொடர்பில் அரசாங்கம் அவதானம் செலுத்தியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட் டுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபை மற்றும் உலக சுகாதார ஸ்தாபனம் என்பவற்றின் பங்குபற்றுதலுடன் முன் னெடுக்கப்படும் சர்வதேச தடுப்பூசி வேலைத்திட்டத் தின் கீழ் இலங்கையின் சனத்தொகையில் 20 சதவீத மானோருக்கு தடுப்பூசியைப் பெற்றுக் கொடுக்க நட வடிக்கை எடுக்கப்படும் என்று உலக சுகாதார ஸ்தா பனம் தெரிவித்துள்ளது.

தடுப்பூசியை இறக்குமதி செய்வதற்கான செலவு அதன் செயற்திறன் மற்றும் உற்பத்தி செலவைப் பொறுத்தது என்று இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன தெரிவித்துள்ளார்.

உலக வங்கியுடன் கலந்துரையாடல்களை முன் னெடுக்கும் போது தடுப்பூசி தொடர்பாக அவதானம் செலுத்தப்படும் என்றும் இராஜாங்க அமைச்சர் கூறியுள்ளார்.

தடுப்பூசியை பெற்றுக் கொள்வதற்கும், அதனை உகந்த வெப்பநிலையில் களஞ்சியப்படுத்தி வைப்பதற் கும் அதிக செலவாகும் என்றும் அவர் சுட்டிக்காட்டி யுள்ளார்.

சுகாதார சேவைகளில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு முதலில் தடுப்பூசியைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுப்பதாகவும், அடுத்த கட்டமாக யாருக்கு வழங்குவது என்பதைத் தீர்மானிப்பதற்காக விசேட குழுவொன்று நியமிக்கப்படும் என்றும் இராஜாங்க அமைச்சர் கூறியுள்ளார்.


## பருத்தித்துறை நகரசபை
## பகிரங்க ஏலம்

01.01.2021 ஆம் திகதி தொடக்கம் 31.12.2021 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்கு கீழ்வரும் நிலையங் களை குத்தகைக்கு நடத்துவதற்கான பகிரங்க ஏலம் 28.12.2020 ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு பருத் தித்துறை நகரசபை அலுவலகத்தில் நடைபெறும்.ஏலக் கேள்வியில் கலந்து கொள்வோர் அன்றைய தினம் மு.ப.10.00 மணிக்கு முன்னர் மீளளிப்பு செய்யப்படாத வைப்புப்பணமாக ஆயிரம் ரூபாவினை (ரூபா.1000.00) செலுத்தி ஆளடையாளத்தை உறுதிப்படுத்தி ஏலத்தில் பங்கு கொள்ளலாம்.

மேலதிக தகவல்களை பருத்தித்துறை நகரசபை அலு வலகத்தில் கடமை நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

1. மரக்கறிச் சந்தையின் துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு நிலையம்.
2. தும்பளை கிழக்கு சிறுவர் மகிழ்வகம்.
3. தும்பளை கிழக்கு சிறுவர் மகிழ்வக விற்பனைக் கூடம்.

21.12.2020

திரு.யோ.இருதயராசா
தவிசாளர்
பருத்தித்துறை நகரசபை.


## குருகுலம் தமிழ் மொழி ஒளிபரப்பு அட்டவணை

| 22.12.2020 | செவ்வாய்க்கிழமை |
|---|---|
| 04.00 - 04.55 | தரம் - 12 உயிர்முறைமைகள் தொழிநுட்பம் (த) |
| 05.00 - 05.55 | தரம் - 13 உயிர்முறைமைகள் தொழிநுட்பம் (த) |
| 06.00 - 06.55 | தரம் - 12 தொழிநுட்பத்திற்கான விஞ்ஞானம் (த) |
| 08.00 - 08.55 | தரம் - 08 கணிதம் (த)(1ஆம், 2ஆம்)<br>தரம் - 08 விஞ்ஞானம் (த)(2ஆம், 4ஆம்) |
| 09.00 - 09.55 | தரம் - 09 கணிதம் (த)(1ஆம், 2ஆம்)<br>தரம் - 09 விஞ்ஞானம் (த)(1ஆம், 2ஆம்) |
| 10.00 - 10.55 | தரம் - 10 கணிதம் (த) |
| 11.00 - 11.55 | தரம் - 11 புவியியல் (த) |
| 12.00 - 12.55 | தரம் - 12 புவியியல் (த) |
| 13.00 - 13.55 | தரம் - 13 புவியியல் (த) |
| 14.00 - 14.55 | தரம் - 07 கணிதம் (த) (1ஆம், 2ஆம்)<br>தரம் - 07 விஞ்ஞானம் (த) (2ஆம், 4ஆம்) |
| 15.00 - 15.55 | தரம் - 12 பௌதிகவியல் (த) |
| 16.00 - 16.55 | தரம் - 13 பௌதிகவியல் (த) |
| 17.00 - 17.55 | தரம் - 13 தொழிநுட்பத்திற்கான விஞ்ஞானம் (த) |
| 18.00 - 18.55 | தரம் - 06 கணிதம் (த) (1ஆம், 2ஆம்)<br>தரம் - 06 விஞ்ஞானம் (த) (2ஆம், 4ஆம்) |
| 22.30 - 23.25 | தரம் - 12 அரசியல் விஞ்ஞானம் (த) |
| 23.30 - 24.30 | தரம் - 13 அரசியல் விஞ்ஞானம் (த) |

நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## ஜெனிவாவா? நியூயோர்க்கா?

ஜெனிவாவில் வரும் மார்ச் மாதம் நடைபெறவிருக்கும் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் அமர்வை தமிழ்த் தேசியக் கட்சிகள் எல்லாம் ஒன்றுபட்டு அணுக வேண்டும் – சர்வதேச சமூகத்தை ஒற்றை நிலைப்பாட்டில் கையாள வேண்டும் – என்ற தமிழ் மக்களின் எதிர்பார்ப்புத் தொடர்பில் ஒரு தீர்க்கமான கட்டத்தை அடைந்திருக்கின்றோம் என்றே தோன்றுகின்றது.

இவ்விடயத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரனும், தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவர் நீதியரசர் சி.வீ.விக்னேஸ்வரனும் கருத்து முரண்பட்டு, ஆளாளுக்கு அரசியல் முரண்பாட்டு அறிக்கைகளையோ – சேறு வாரல் அறிவிப்புக்களையோ விடுத்தாலும் கூட, இவ்விடயத்தில் ஒன்றுபட்டுச் செயற்பட வேண்டும், ஒத்த நிலைப்பாட்டுக்கு வரவேண்டும் என்பதில் தொடர்ந்து கரிசனை காட்டியவாறுதான் உள்ளனர். வேற்றுமையில் ஒற்றுமை காண்பதான முயற்சி அவர்களின் கருத்து முரண்பாட்டு அறிக்கைகளிலும் இழையோடுவதைக் காணலாம்.

அத்தகைய நிலைப்பாட்டில் இருப்போர் ஏதோ ஒரு தளத்தில் இணக்கத்துக்கு வந்து, உடன்பாடான கட்டத்தை நெருங்குவர், அதற்கு வாய்ப்புண்டு என்று நம்பலாம்.

ஆனால் அடுத்த தரப்பான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் – அதன் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம்.பியின் – நிலைப்பாடு மலைக்க வைப்பதாக இருக்கின்றது.

அது, சரியா, பிழையோ என்பதற்கு அப்பால் இவ்விடயத்தில் மற்றைய இரு தமிழ்த் தேசியக் கட்டமைப்புகளான தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனும் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியுடனும் இணைந்து போகாத ஒரு நிலைப்பாட்டையே அவர் வெளிப்படுத்தி நிற்கின்றார்.

யுத்தம் முடிந்து பதினொரு ஆண்டுகள் கடந்து விட்டன.

அவ்வப்போது ஐ.நா.பொதுச் செயலாளர் பதவிகளில் இருந்தவர்கள் யுத்தத்தின் போது இடம்பெற்றவை தொடர்பில் அறிக்கைகள், அறிவிப்புகள் வெளியிட்டமையோடு சரி.

இதற்கு அப்பால், இந்தியா உள்பட சர்வதேச நாடுகளின் தலைவர்களுடன் – இந்தப் பிரச்சினையைக் குறித்து – அவ்வப்போது தமிழ்த் தலைவர்கள், சந்தித்து பேசியமைக்கு அப்பால், சர்வதேச அரங்கில் இவ்விடயம் பெரியளவில் கையாளப்படவும் இல்லை. கவனத்தை ஈர்க்கவும் இல்லை.

ஆக ஐ.நா.மனித உரிமைகள் கவுன்ஸிலில்தான் இவ்விடயம் அதிகம் – அவ்வப்போது – கையாளப்பட்டது.

யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் தமிழர்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட யுத்தக் குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான கொடூரங்கள், மனித உரிமை மீறல்கள் குறித்து நீதி முறையான விசாரணைகள் நடத்தப்பட்டு, உண்மைகள் கண்டறியப்பட்டு, பொறுப்புக் கூறல் நிலை நாட்டப்பட்டு, இழப்பீடுகள் வழங்கப்பட்டு, மீள நிகழாமை உறுதிப்படுத்தப்பட்டு, நல்லிணக்கமும் புனர்வாழ்வும் மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற விவகாரம் கடந்த பதினொரு ஆண்டுகளாக ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் நான்கு சுவர்களுக்குள் ஆணித்தரமாக ஒலித்து வந்திருக்கின்றது.

கஜேந்திரகுமார் பொன்னம்பலம் உட்பட தமிழ்த் தலைவர்கள் எல்லோரும் தமிழினத்தின் தேசிய இனைப்பிரச்சினை தொடர்பில் சர்வதேச மட்டத்தில் தமது கருத்துக்களை முன்வைத்த சர்வதேச அரங்கமாக ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலே இருந்த வந்தது; இருந்து வருகின்றது.

ஆனால், இப்போது தமிழ்க் கூட்டமைப்பை விமர்சிக்கும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் இந்த ஐ.நா மனித உரிமைகள் கவுன்ஸில் பொருத்தமில்லாத அரங்கு என்று கூறுகின்றார்.

'கடந்த காலங்களில் எத்தனையோ தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு எந்தவிதமான பலனும் கிடைக்கவில்லை என்று ஒரு பக்கம் குற்ற ஒப்புதல் வாக்குமூலம் அளித்துக் கொண்டு, அதேசமயம் தொடர்ந்தும் அந்த அரங்கில் சிறிலங்காவை வைத்திருக்க வேண்டும் என்பது முரணிலை அல்லவா? அது சிறிலங்காவுக்கு மேலும் கால அவகாசம் பெற்றுக் கொடுக்கும் வேலையன்றி வேறு யாது?' – என அவர் கேட்கின்றார்.

நல்லது. அவர் கூறுகின்றபடி ஜெனிவா அரங்கை நம்பிப் பிரயோசனமில்லை என்று அதைக் கைவிடுவோம், அங்கு இலங்கையைத் தொடர்ந்து கட்டிப்போடும் பிரேரணையை நிராகரித்து ஒதுக்குவோம். அதற்குப் பிறகு யாது?

ஜெனிவா அரங்கை நாம் கைவிட்டு விட்டால், அதற்காக ஐ.நாவின் பொதுச் சபைக்கோ அல்லது பாதுகாப்புச் சபைக்கோ இந்த விடயத்தைக் கொண்டு போய் அங்கு அதனைக் கொதி நிலையில் வைத்திருப்பதற்கான வாய்ப்புண்டு என்று கஜேந்திரகுமார் கருதுகின்றாரா?

நியூயோர்க்கில் ஐ.நா.பொதுமன்றத்தை நம்பி, ஜெனிவாவில் ஐ.நா.மனித உரிமைகள் கவுன்ஸிலைக் கைவிடுவது,'அரசனை நம்பிப் புருசனைக் கைவிட்ட கதை' மாதிரியாகி விடாதா?

பாதுகாப்புச் சபையில் கொழும்பு ஆட்சிப் பீடத்தைக் காப்பாற்றுவதற்கு சீனாவும், ரஷ்யாவும் வீட்டோ அதிகாரத்துடன் உறுதியாக நிற்கையில், அந்தப் பாதுகாப்புச் சபையை நம்பி ஜெனிவாச் செயற்பாட்டை கைவிடலாமா?

கஜேந்திரகுமார் கொஞ்சம் வெளிப்படையாகவும், உருப்படியாகவும், திட்டவட்டமாகவும் தமது கட்சியின் நிலைப்பாட்டைத் தெளிவுப்படுத்த வேண்டும்.

# ஜனாதிபதி கோட்டாபயவுக்கு முழு ஒத்துழைப்பு வழங்குவேன்!

## அத்துரலியே ரத்ன தேரர் உறுதி

கொழும்பு, நவ.22

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் சுபீட்சமான எதிர்கால கொள்கைத் திட்டத்தை பலப்படுத்த முழுமையான ஒத்துழைப்பு வழங்குவேன்.

அபே ஜனபல வேகய கட்சி தீர்மானம்மிக்க அரசியல் கட்சியாக பலம் பெறும் என தேசிய பட்டியல் ஊடாக நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டுள்ள அத்துரலியே ரத்ன தேரர் தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் –

இடம்பெற்று முடிந்த பொதுத்தேர்தலில் அபேஜனபல வேகய கட்சி பல சவால்களுக்கு மத்தியில் சுமார் 69 ஆயிரம் வாக்குகளைப் பெற்றுக் கொண்டது.

அபேஜனபல வேகய கட்சி 5 தேர்தல் மாவட்டங்களில் தாக்கல் செய்த வேட்பு மனுக்கள் அரசியல் சூழ்ச்சியின் காரணமாகவே இரத்து செய்யப்பட்டன.

கொவிட் – 19 வைரஸ் தாக்கத்துக்கு மத்தியில் பொதுத்தேர்தல் நடத்தப்பட்டது. இதுவும் நாங்கள் குறைவான வாக்குகளை பெறுவதற்கு ஒரு காரணியாக அமைந்தது.

பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியில் பெற்றுக் கொண்ட 69 ஆயிரம் வாக்குகளுக்கு ஒரு தேசிய பட்டியல் ஆசனம் ஒதுக்கப்பட்டது.

இந்த ஒரு தேசிய பட்டியல் ஆசனம் அபே ஜனபல வேகய கட்சிக்குள் பாரிய முரண்பாட்டைத் தோற்றுவித்தது.



தேசிய பட்டியல் ஆசன முரண்பாட்டுக்கு தீர்வைக் காண நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. நீதிமன்ற தீர்ப்பு எப்போது கிடைக்கும் என்று குறிப்பிட முடியாது. நாடாளுமன்றத்தில் ஒரு தேசிய பட்டியல் ஆசனத்தில் வெற்றிடம் நிலவுவது 69 ஆயிரம். மக்கள் எமக்கு வழங்கிய ஆணைக்கு முரணாகும்.

ஆகவே, இதற்குத் தீர்வைக் காணும் நோக்கில் அனைத்து மட்டத்திலும் பேச்சு முன்னெடுக்கப்பட்டது. தேசிய பட்டியல் ஆசனத்துக்கு என்னை தெரிவு செய்ய ஞானசார தேரர் உட்பட அனைவரும் இணக்கம் தெரிவித்தார்கள்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதி தேர்தலில் வெற்றிபெற முழுமையான ஒத்துழைப்பு வழங்கினோம். சுபீட்சமான எதிர்கால கொள்கை திட்டம் தேசியத்துக்கு முன்னுரிமை வழங்கியுள்ளது.

சுபீட்சமான எதிர்கால கொள்கை திட்டத்தை முழுமையாக செயற்படுத்த முழுமையான ஒத்துழைப்பு வழங்குவேன்.– என்றார்.

# ஐஸ் உற்பத்தி நிலையம் மட்டக்களப்பில் தீ விபத்து!





மட்டக்களப்பில் கைவிடப்பட்ட நிலையிலுள்ள ஐஸ் உற்பத்தி நிலையத்தில் ஏற்பட்ட தீ கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு – கல்லடி பாலத்துக்கு அருகில் நீண்டகாலமாக கைவிடப்பட்ட நிலையில் இருந்த ஐஸ் தொழிற்சாலையிலேயே ஞாயிற்றுக்கிழமை மாலை, இந்தத் தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

இந்த ஐஸ் தொழிற்சாலை மட்டக்களப்பு மாவட்ட கடற்றொழில் நீரியல்வள திணைக்களத்துக்கு அருகில் 2009 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டு செயற்பட்டு வந்த போதும் கடந்த 5 வருடங்களுக்கு மேலாக அது கைவிடப்பட்ட நிலையில் இருந்து வருகின்றது.

இந்நிலையில் இந்த ஐஸ் தொழிற்சாலையில் கடந்த ஆறு மாதங்களுக்கு முன்பாகவும் தீ விபத்து ஏற்பட்டிருந்தது.

ஞாயிறு மாலையும் பலத்த மழைக்கு மத்தியிலும் இந்த தீ விபத்து ஏற்பட்டுள்ள நிலையில் அந்தத் தீயை மட்டக்களப்பு மாநகரசபையின் தீயணைக்கும் பிரிவினர் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்தனர்.

மேற்படி பகுதிக்கு வருகை தந்த மட்டக்களப்பு மாநகரசபை முதல்வர் தி.சரவணபவன், மாநகர ஆணையாளர் மா.தயாபரன் மற்றும் உறுப்பினர்கள் தீயணைக்கும் படையினருக்கு ஒத்துழைப்பு வழங்கினர்.

இது தொடர்பாக மட்டக்களப்பு பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# வெளிவிவகார அமைச்சினது அனுமதியின்றி வெளிநாட்டிலுள்ள இலங்கையர் நாடு வரலாம்!

விமான நிலையம் எதிர்வரும் 26 ஆம் திகதி திறந்த பின்னர் வெளிநாடுகளில் உள்ள இலங்கையர்கள் வெளிவிவகார அமைச்சின் அனுமதியின்றி இனி நாட்டுக்கு வருகை தர முடியும் என சிவில் விமான சேவைகள் அதிகார சபையின் தலைவர் உபுல் தர்மதாஸ தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 26 ஆம் திகதி முதல் அதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

கொவிட் தொற்று பரவல் தீவிரமடைந்த காரணத்தால் கடந்த மார்ச் மாதம் முதல் விமான நிலையங்கள் மூடப்பட்டன. வெளிநாடுகளில் நெருக்கடிக்குள்ளான இலங்கையர்கள், வெளிவிவகார அமைச்சின் அனுமதியை பெற்றே, நாட்டுக்கு இதுவரை அழைத்து வரப்பட்டனர்.

இந்த நிலையில் எதிர்வரும் 26 ஆம் திகதி முதல் வழமை போன்று நாட்டுக்கு வருவதற்கான அனுமதி வழங்கப்படுகின்றது. எனினும், சுகாதார நடைமுறைகள் உரிய வகையில் கடைபிடிக்கப்படும்.

நாட்டுக்குள் வரும் அனைவரும் பி.சி.ஆர். பரிசோதனையை முன்னெடுக்க வேண்டும். விமான நிலையத்தில் 3 ஆயிரத்து 500 பி.சி.ஆர். பரிசோதனைகளை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் ஒரு நாளைக்கு விமான நிலையத்தில் சுமார் 3ஆயிரத்து 500 பி.சி. ஆர். பரிசோதனைகளை முன்னெடுக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இலங்கைக்கு வருகைத் தரும் சுற்றுலா பயணிகளுக்கான சுகாதார வழிமுறைகள் தொடர்பில் உரிய தரப்புக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக சுகாதார தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

## சட்டவிரோதமாகக் கடத்தப்பட்ட 1,900 கிலோ மஞ்சள் மீட்பு!

முந்தல் – சின்னப்பாடு கடற்பகுதியில் சட்டவிரோதமாக நாட்டுக்கு எடுத்துவரப்பட்ட 1,900 கிலோ கிராம் மஞ்சள் மூடைகளை கடற்படையினர் கைப்பற்றியுள்ளனர்.

முந்தல் – சின்னப்பாடு கடற்பகுதியில் ஞாயிற்றுக்கிழமை அதிகாலை கடற்படையினரால் மேற்கொள்ளப்பட்ட ரோந்து நடவடிக்கையின் போதே அந்த மஞ்சள் மூடைகள் கைப்பற்றப்பட்டன எனக் கடற்படை ஊடகப் பிரிவு தெரிவித்தது.

இதன்போது தனிமைப்படுத்தல் சட்டவிதிகளுக்கு புறம்பாகவும், சட்டவிரோதமான முறையிலும் இந்தியாவிலிருந்து எடுத்துவரப்பட்ட மஞ்சள் மூடைகளை சந்தேக நபர்கள் 59 உரைப்பைகளுக்குள் அடைத்து வைக்கப்பட்டிருந்துள்ளமையுடன். அவற்றுள் நீர் உட்புகாத வகையில் அது பொலித்தீன் பைகளால் மேலும் பாதுகாப்பான முறையில் பொதி செய்து வைத்திருந்துள்ளனர்.

இந்த மஞ்சள் 110 லட்சம் ரூபாவையும் விட அதிக பெறுமதியுடையவை என்றும் கருதப்படுகின்றது. மஞ்சள் தொகையை சட்டவிரோதமாக நாட்டுக்கு எடுத்துவந்த நபர்கள் தப்பியோடியுள்ளனர்.

இதனைத் தொடர்ந்து மஞ்சள் மூடைகளை மேலதிக விசாரணைகளுக்காக கடற்படையினர் சுங்க திணைக்களத்திடம் ஒப்படைத்துள்ளனர்.

# சகல இனமக்களும் ஏற்பதாக புதிய அரசமைப்பு அமையும்!

## என்கிறார் வாசுதேவ



கொழும்பு, நவ.22

புதிய அரசமைப்பு அனைத்து இன மக்களும் ஏற்றுக்கொள்ளும் வகையில் உருவாக்கப்படும். வரலாற்று ரீதியான தவறுகள் இம்முறை திருத்திக் கொள்ளப்படும் என நீர் வழங்கல் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

புதிய அரசமைப்பு உருவாக்கம் தொடர்பில் வினவிய போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் –

இலங்கை பல்லின சமூகம் வாழும் நாடு. அனைத்து இன மக்களின் அபிலாஷைகளும் அரசமைப்புக்குள் உள்வாங்கப்பட வேண்டும்.

தேசிய பாதுகாப்பு மற்றும் இறையாண்மை ஆகிய அடிப்படை காரணிகள் அரசமைப்பில் முக்கியமானவை. இவற்றில் தனிப்பட்ட மக்களின் காரணிகள் செல்வாக்குச் செலுத்தாது. இலங்கையின் அரசமைப்பு ஒற்றையாட்சி தன்மைக் குட்பட்டது.

ஆனால் ஒரு தரப்பினர் சமஷ்டியாட்சி அடிப்படையில் அரசமைப்பு உருவாக்கப்பட வேண்டும் எனக் குறிப்பிட்டுக் கொள்கிறார்கள். அது அவர்களின் தனிப்பட்ட மற்றும் கட்சி நிலைப்பாடாகும்.

இலங்கையின் அரசமைப்பு சமஷ்டியாட்சி தன்மையில் உருவாக்க முடியாது என்பதற்கு அரசியல் மற்றும் பௌதீக காரணிகள் செல்வாக்கு செலுத்துகின்றன. ஆகவே சமஷ்டியாட்சி அரசமைப்பு என்பது சாத்தியமற்றது.

புதிய அரசமைப்பை உருவாக்குவது ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கத்தின் பிரதான இலக்காகும். அதற்கான ஆரம்பக்கட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

புதிய அரசமைப்பில் அனைத்து இன மக்களின் அபிலாஷைகளும் உள்வாங்கப்படும். இனங்களுக்கிடையில் முரண்பாட்டை ஏற்படுத்தும் ஒரு சில ஏற்பாடுகள் நடைமுறையில் உள்ள அரசமைப்பில் காணப்படுகின்றன.

வரலாற்று ரீதியான இவ்வாறான தவறுகள் இம்முறை திருத்திக் கொள்ளப்படும். புதிய அரசமைப்பை அனைத்து இன மக்களும் ஏற்றுக் கொள்வார்கள். – என்றார்.

## வடகீழ் பருவப் பெயர்ச்சி காலநிலை ஆரம்பம் மூன்று மாவட்டங்களுக்கு மண்சரிவு எச்சரிக்கை!

நாடு முழுவதும் வட கீழ் பருவப் பெயர்ச்சிக்கான காலநிலை படிப்படியாக அதிகரிப்பதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக வடக்கு, கிழக்கு, வட மத்திய மற்றும் ஊவா மாகாணங்களிலும் மாத்தளை மற்றும் அம்பாந்தோட்டை மாவட்டங்களிலும் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக் கூடும் என்றும் வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

மேலும் கண்டி , மாத்தளை மற்றும் நுவரெலியா ஆகிய மாவட்டங்களுக்கு தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனத்தால் மண் சரிவு அபாய எச்சரிக்கை விடுவிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய கண்டி மாவட்டத்தில் தொலுவ மற்றும் உடுதும்பர ஆகிய பிரதேச செயலகத்தை அண்மித்த பகுதிகளுக்கும், மாத்தளையில் லஹெறெ பிரதேச செயலகத்தை அண்மித்த பகுதிகளுக்கும், நுவரெலியாவில் வலப்பனை பிரதேச செயலகத்தை அண்மித்த பகுதிகளுக்கும் இவ்வாறு மண் சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை மத்திய மாகாணமும், பதுளை, அம்பாறை மற்றும் மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களும் அதிக எச்சரிக்கை மிக்க பகுதிகளாக அறிவிக்கப்பட்டுள்ளமையோடு , இங்கு 100 மில்லி மீற்றரை விட அதிக மழைவீழ்ச்சி பதிவாகக் கூடும் என்றும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மேற்கூறப்பட்ட பிரதேசங்களில் இடியுடன் கூடிய மழை பெய்யும் சந்தர்ப்பங்களில் சில சமயங்களில் காற்றின் வேகமும் அதிகரிக்கக் கூடும் என்பதால் மக்கள் மிகுந்த அவதானத்துடன் செயற்பட வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேல் மற்றும் சப்ரகமுவ மாகாணங்களிலும் காலி, மாத்தறை, கண்டி மற்றும் நுவரெலியா மாவட்டங்களில் பிற்பகல் 2 மணிக்கு பின்னர் இடைக்கிடையே மழை பெய்யக்கூடும். கிழக்கு மாகாணத்திலும் மாத்தளை, காலி, நுவரெலியா மற்றும் பொலன்னறுவை மாவட்டங்களிலும் 75 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகக் கூடும்.

கடந்த சனிக்கிழமை காலை 8.30 மணியுடன் நிறைவடைந்த 24 மணித்தியாலங்களில் அம்பாறை மாவட்டத்தில் பதியத்தலாவ பகுதியில் 126 மில்லிமீற்றர் அதி கூடிய மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் சந்தர்ப்பங்களில் தற்காலிகமாக பலத்த காற்றும் மின்னல் தாக்கங்களும் ஏற்படக்கூடும் என்பதால், முன்னெச்சரிக்கையுடன் செயற்படுமாறு மக்கள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

## கெரவலப்பிட்டி தொழில்துறை பேட்டையின் அபிவிருத்திப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன!

முதலீட்டு வாய்ப்புகளை விரிவுபடுத்துவதற்கும் முதலீட்டாளர்களை ஊக்குவிப்பதற்கும் அரசின் உட்கட்டமைப்பு மேம்பாட்டு திட்டத்தின் கீழ் அதிவேக நெடுஞ்சாலைக்கான நுழைவு சாலையாக விளங்கும் கெரவலப்பிட்டி தொழில்துறை பேட்டை சாலையின் மேம்பாட்டு பணிகள் ஞாயிற்றுக்கிழமை கிராமப்புற சாலைகள் மற்றும் பிற உள்கட்டமைப்பு இராஜாங்க அமைச்சர் நிமல் லான்சா தலைமையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பில் அமைச்சின் ஊடகப் பிரிவு மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

2.2 கி.மீ கெரவலப்பிட்டி தொழில்துறை பேட்டை நான்கு வழி சாலைகள் இரண்டு கட்டங்களாக அபிவிருத்தி செய்யப்படும். முதல் கட்டத்தின் 0.5 கி.மீ. 133 மில்லியன் ரூபா செலவிலும், இரண்டாம் கட்டத்தின் 1.7 கி.மீ 300 மில்லியன் ரூபா செலவிலும் அபிவிருத்தி செய்யப்படும். கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் நுழைவாயிலிலும், கொழும்பு துறைமுகத்துக்கான அதிவேக நெடுஞ்சாலையிலும் அமைந்துள்ள இந்த தொழில்துறை பூங்கா சாலை மிகவும் கவர்ச்சிகரமான பகுதியாக உருவாக்கப்பட்டு வருகிறது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் நாட்டை கட்டியெழுப்பும் 'செழிப்பு பார்வை' தேசிய அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ் செயற்படுத்தப்படும் ஒரு லட்சம் கி.மீ. கிராமப்புற சாலைகள் அபிவிருத்திக்கான தேசிய திட்டத்தின் கீழ் அபிவிருத்தி செய்யப்படுகின்றன. இந்த அபிவிருத்திகள் ஜனாதிபதி பணிக்குழுவின் தலைவர் பஸில் ராஜபக்ஷவின் அறிவுறுத்தல்களின் படி செயல்படுத்தப்படும்.

உட்கட்டமைப்பு மேம்பாடு என்பது உள்ளூர் மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்களை ஊக்குவிப்பதற்கும் புதிய முதலீட்டு வாய்ப்புகளை உருவாக்குவதற்கும் அரசாங்கத்தின் ஒரு பங்காகும்.

நாட்டின் பொருளாதாரத்துக்கு அதிக பங்கு வகிக்கும் பல தொழில்கள் இந்த சாலையில் அமைந்துள்ளதமையால் இந்த சாலையின் மேம்பாட்டு பணிகள் விரைவில் நிறைவடையும் என்று கிராமப்புற சாலைகள் மற்றும் பிற உள்கட்டமைப்பு இராஜாங்க அமைச்சர் நிமல் லான்சா நிகழ்வின் போது தெரிவித்தார்.

மஞ்சள் கன்றுகள் விற்பனைக்கு!

நல்ல தரமான இரண்டு அடி வரை வளர்ந்த
ஒன்றரை மாத மஞ்சள் கன்றுகள்
யாழ்ப்பாணத்தில் விற்பனைக்கு உண்டு.
விலை - 150/=





கற்பகவனம் விற்பனை நிலையம்.
461, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ் முற்றம் - Yarl Muttam)
021 492 7778

## திருகோணமலை நகரை அண்டிய பகுதிகளில் 15 பேருக்கு தொற்று!

திருகோணமலை மாவட்டத்தின் நகரை அண்டிய பிரதேசத்தில் 15 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர் என மாவட்ட அரச அதிபர் சமன் தர்சன பாண்டிகோரள தெரிவித்துள்ளார்.

இதன்படி, கிழக்கு மாகாண ஆளுநரின் அறிவுறுத்தலுக்கமைய திருகோணமலை கல்விக் கோட்டத்திற்குட்பட்ட அனைத்து பாடசாலைகளும் திங்கட்கிழமை முதல் மறு அறிவித்தல்வரை மூடத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், பொதுமக்கள் சுகாதாரத் துறையினர் விடுத்துள்ள அறிவுறுத்தல்களை முற்றாகக் கடைப்பிடித்தல் இன்றியமையாதது என அரச அதிபர் தெரிவித்துள்ளார்.

அத்துடன், முகக் கவசம் அணிதல், சமூக இடைவெளி பேணல், கைகளைக் கழுவுதல், அநாவசிய பயணங்களைத் தவிர்த்தல் என்பவற்றைக் கடைப்பிடிக்குமாறு அரச அதிபர் மக்களைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

காலைக்கதிர் Kalaikkathir

# கூட்டமைப்பு இரட்டை வேடம் கஜேந்திரகுமார் கடுங்காட்டம்

## தமிழ் மக்களுக்கு ஒரு முகம் அரசுக்கு மற்றொரு முகமாம்



கஜேந்திரகுமார் பொன்னம்பலம்
தலைவர்
தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி

செவ்வி கண்டவர்:- எஸ்.நிதர்ஷன்

சிறிலங்கா அரசாங்கத்தைக் காப்பாற்றுகின்ற வகையிலையே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் செயற்பாடுகள் அமைகின்றன. அதன் தொடராகவே ஜெனிவா மனித உரிமைகள் பேரவையிலும் சிறிலங்காவிற்கு மீண்டும் கால அவகாசத்தை பெற்றுக் கொடுக்கும் வகையில் செயற்படுகின்றனர். உண்மையில் தமிழ் மக்களிற்கு ஒரு முகத்தையும் அரசிற்கு இன்னொரு முகத்தையும் காட்டி இரட்டை வேடம் போடுகின்ற செயற்பாடுகளையே கூட்டமைப்பினர் முன்னெடுத்து வருகின்றனர்.

– இவ்வாறு கூட்டமைப்பைப் பகிரங்கமாகக் குற்றஞ்சாட்டியுள்ள தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் இத்தகைய விடயங்களை பிடி கொடுக்காமல் நாசூக்காகச் செய்வதற்கு பழக்கப்பட்ட ஒருவராக சுமந்திரன் இருந்தாலும் அவருடைய அத்தகைய போக்குகளை ஆரம்பத்திலிருந்தே எங்களைப் போன்றவர்கள் புரிந்து கொண்டு மக்களுக்கு அம்பலப்படுத்தி வந்திருக்கின்றோம். ஆனாலும் அத்தகைய செயற்பாடுகளையே அவர் இன்றைக்கும் செய்து வருகின்றார் எனவும் குறிப்பிட்டார்.

யாழ்ப்பாணம் கொக்குவிலில் உள்ள தமது கட்சி அலுவலகத்தில் நேற்றுத் திங்கட்கிழமை மாலை நடத்திய ஊடக சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன் போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

வரவு – செலவுத் திட்ட விவாதங்கள் நடைபெற்றுக்கொண்டிருந்த இறுதிநாளில் சுமந்திரன் என்னோடும் எமது கட்சியின் செயலாளரோடும் கதைத்திருந்தார். அதன் போது ஜெனிவா அமர்வில் இந்த முறை 2 வருட கால அவகாசம் முடிவடைகின்ற நிலையிலே அந்த உறுப்பு நாடுகளுக்கு இலங்கை தொடர்பாக எப்படிப்பட்ட நிலைப்பாட்டை எடுக்க வேண்டும் என்பது சம்பந்தமாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எழுத்து மூலமான மகஜரொன்றைத் தயாரித்திருப்பதாகவும் அதனை ஒரு பொது மகஜராக ஏனைய தமிழ்க் கட்சிகளும் பொது அமைப்புக்களும் புத்துஜீவிகளும் ஏற்று கையொப்பமிட்டு அனுப்பக் கூடிய ஆவணமாக அது வெளிவருவதுதான் பொருத்தமாக இருக்குமென்று கூறி எம்மிடம் அதனுடைய பிரதியொன்றையும் வழங்கினார்.

அதன் பின்னர் எம்முடைய அமைப்பு எங்களுடைய சட்ட ஆலோசகர்களிடமும் மனித உரிமைகள் சம்பந்தப்பட்ட விடயத்தில் செயலாற்றுபவர்களுடனும் பேசிய தன் பிற்பாடு நாங்கள் அந்த வரைவை நிராகரிக்கின்றதொரு நிலைப்பாட்டிற்குத் தள்ளப்பட்டுள்ளோம். அந்த அறிக்கையானது ஏழு பக்ககங்களைக் கொண்ட அறிக்கையாக இருக்கின்றது. அதன் முக்கால்வாசி – அதாவது பெரும்பாலானவை – உண்மையிலே கூட்டமைப்பு கடந்த 2012 ஆம் ஆண்டில் இருந்து ஐ.நா மனித உரிமை பேரவை சம்பந்தப்பட்ட விடயங்களில் தாங்கள் முன்னெடுத்த அல்லது ஆதரித்த நிலைப்பாட்டை நியாயப்படுத்துகின்ற கோணத்தில் தான் அமைந்திருந்தது.

இவ்வாறு அவை எல்லாவற்றையும் சொல்லி ஆனால், அதில் ஓர் இடத்தில் அப்படியெல்லாம் செய்தும் கூட அந்த தீர்மானங்கள் ஊடாக எந்த விதமான பலனும் தமிழ் மக்களுக்குக் கிடைக்கவில்லை என்றதொரு வசனத்தையும் அதில் சேர்த்திருக்கின்றார்கள். ஆனால் அதற்கு மேலதிகமாக அப்படியிருந்தும் கூட சிறிலங்காவை தொடர்ந்தும் சர்வதேச அரங்கில் வைத்திருக்க வேண்டும் என்பதற்காக சர்வதேச சமூகம் அதற்குரிய வகையில் ஒரு முடிவை எடுக்க வெண்டுமென்றும் அதில் ஒரு கோரிக்கையாகவும் முன்வைத்திருக்கின்றனர்.

எம்மைப் பொறுத்தவரையில் அந்த ஆவணத்தை மிகவும் கவனமாக நாங்கள் படித்தோம். அவ்வாறு அதனை முழுமையாக நாங்கள் தொகுத்துப் பார்க்கின்ற பொழுது மீண்டும் ஒருமுறை அரசாங்கத்திற்கு கால அவகாசம் வழங்குகின்ற கோணத்தில் தயாரிக்கப்பட்ட ஆவணமாகத்தான் நாங்கள் அதனைப் பார்க்கின்றோம்.

அந்த வகையில் கடந்த 2012 ஆம் ஆண்டில் இருந்த – அதாவது முதலாவது தீர்மானம் நிறைவேற்றப்பட்ட நாளில் இருந்து அந்தத் தீர்மானங்களை கடுமையாக விமர்சித்து வருகின்ற – ஒரு தரப்பாகவே தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி செயற்பட்டு வருகின்றது.

அதாவது, மனித உரிமைப் பேரவை அரங்கு என்பது தமிழ் மக்களின் பொறுப்புக் கூறலை பாதிக்கப்பட்ட மக்கள் உண்மையில் அடையாமல் முடக்கப்பட்டு இருக்கின்ற அரங்காகத்தான் அதனை கடந்த 2012 ஆம் ஆண்டிலிருந்து நாங்கள் விமர்சித்தக் கொண்டு வருகின்றோம்.

அதே சமயம் நாங்கள் மிகத் தெளிவாக சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு அல்லது ஒரு சர்வதேச விசேட குற்றவியல் தீர்ப்பாயம் ஒன்றின் ஊடாகத் தான் ஒரு பொறுப்புக் கூறல் முழுமையாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு கிட்டும் என்ற விடயத்தை இங்கு மட்டுமல்ல, ஐ.நா மனித உரிமைகள் பேரவையிலும் ஆணித்தர மாக பதிவிட்டு வந்திருக்கின்றோம்.

ஆகவே அந்தப் பின்னனியில் சுமந்திரன் அவர்களும் கூட்டமைப்பும் தயாரித்த அந்த அறிக்கையில் நாங்கள் கையொப்பம் இட முடியாது. அந்த நிலைமை சுமந்திரன் அவர்களுக்கே நன்றாகத் தெரியும். ஏனெனில் அந்த மகஜரை எங்களிடம் கொடுத்த போதும் கூட *'மனித உரிமை பேரவையில் உங்களுக்கு நம்பிக்கை இல்லை என்று எங்களுக்குத் தெரியும், எனினும் மனித உரிமைப் பேரவையில் இலங்கையைத் தொடர்ந்தும் வைத்திருக்கிற வரைக்கும் குற்றவியல் நீதிமன்றத்திற்கோ அல்லது வேறு ஓர் அரங்கிற்கோ கொண்டு போவதற்கு இந்த நாடுகள் பெரியளவில் அக்கறை காட்ட மாட்டார்கள் என்பது தான் உங்கள் கருத்து என்பதும் எங்களுக்குத்தெரியும். இருந்த போதிலும் கூட நீங்கள் இந்த மகஜரைப் படித்துப் பாருங்கள்'* என்றுதான் அதனை எங்களிடம் கொடுத்திருந்தார். ஆகவே நாங்கள் அந்த அறிக்கையை ஏற்றுக் கொள்ளக் கூடிய நிலைமையில் இல்லை என்பது அவருக்கே தெரியும். நாங்கள் அதை வாசிப்பதற்கு முதலே அதற்கான எங்களுடைய பதில் எப்படியிருக்கும் என்றது அவருக்கே தெரிந்திருந்தது.

எம்மைப் பொறுத்த வரையில் அந்த ஆவணத்தை மிகவும் கவனமாக நாங்கள் படித்தோம். அவ்வாறு அதனை முழுமையாக நாங்கள் தொகுத்துப் பார்க்கின்ற பொழுது மீண்டும் ஒருமுறை அரசாங்கத்திற்கு கால அவகாசம் வழங்குகின்ற கோணத்தில் தயாரிக்கப்பட்ட ஆவணமாகத்தான் நாங்கள் அதனைப் பார்க்கின்றோம்.

எம்மைப் பொறுத்த வரையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினுடைய செயற்பாடுகள் மிகவும் துரதிஷ்ட்வசமானவை கடந்த வரவு – செலவுத் திட்டத்தில் கூட மக்களுக்கு ஏதோவொன்றை, அதாவது தாங்கள் சரியான வழியில் செயற்படுகின்றனர் எனக் காட்டுவதற்காக விவாதங்களில் கலந்து கொண்டு ஒரு முகத்தைக் காட்டி, ஆனால் முக்கியமான வாக்கெடுப்பு நேரத்தில் எப்படி அவர்கள் எதிர்க்காமல் இருந்தார்களோ அதே போன்று, ஏதோ மனித உரிமைகள் சம்பந்தப்பட்ட விடயத்தில் அல்லது பொறுப்புக் கூறல் சம்பந்தப்பட்ட விடயத்தில் ஏதோ தங்களுக்கும் அக்கறை உள்ளது என்பதைக் காட்டுவதற்காக ஒரு முகத்தையும் காட்டி இன்னொரு இடத்தில் அரசாங்கத்திற்கு மீண்டும் கால அவகா சத்தை பெற்றுக் கொடுக்கிற கோணத்தில் தான் அவர்கள் செயற்பட்டுக் கொண்டு வருகின்றார்கள்.

ஆகவே அவர்களின் இத்தகைய செயற்பாடுகள் ஆச்சரியப்பட வேண்டிய விடயங்கள் அல்ல. தேர்தலுக்குப் பிற்பாடு – அதாவது இந்த அரசாங்கம் ஆட்சி பீடம் ஏறிய பிற்பாடு – தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு செயற்பட்டு வருகின்ற பாதையின் தொடர்ச்சியாகத் தான் இந்த மகஜர் விடயத்தையும் நாங்கள் பார்க்கின்றோம்.

மேலும் மனித உரிமைப் பேரவை பொருத்தமில்லாத ஓர் அரங்கு. அதிலே கடந்த காலங்களில் எத்தனையோ தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு எந்தவிதமான ஒரு பலனும் கிடைக்கவில்லை என்று மக்களுக்கு ஒரு பக்கம் குற்ற ஒப்புதல் வாக்கு மூலத்தைக் கொடுத்து விட்டு, அதே சமயம் தொடர்ந்தும் சிறிலங்காவை மனித உரிமைகள் பேரவை அரங்கில் வைத்திருக்க வேண்டுமெனக் கேட்பது வேறு எந்த அடிப்படையில்? அல்லது இதில் வேறு எந்த முடிவிற்கு நாங்கள் வரலாம்?

எங்களைப் பொறுத்தவரையில் ஒரு பக்கம் அதில் பிரயோசனமும் இல்லை என்று சொல்லிக் கொண்டு, ஆனால் தொடர்ந்து சிறிலங்காவை தொடர்ந்தும் அந்த அரங்கில் வைத்திருக்க வேண்டுமெனக் கேட்பது கால அவகாசம் இல்லாமல் வேறு யாது? வேறு எந்த முடிவிற்கு எவரும் வரக் கூடும்?

சுமந்திரன் ஒரு சட்டத்தரணி. அவர் நாசூக்காக அந்த விடயத்தைப் பிடிகொடுக்காமல் சொல்வதற்கு பழக்கப்பட்ட ஒருவர். ஆனால் நல்ல காலத்திற்கு எங்களைப் போன்றவர்கள் அவருடைய அந்தப் போக்கை ஆரம்பத்திலிருந்து புரிந்து எங்கள் மக்களுக்கு அதனை அம்பலப் படுத்திக் கொண்டு வருகின் றோம். அது தான் இன்றைக்கும் நடக்கின்றது.

சிறிலங்கா அரசாங்கத்தை வெளிப்படையாக ஆதரித்தால் வடகிழக்கு மண்ணில் அவர்களுக்கு கால் வைக்க முடியாமல் போகும். ஆகவே ஏதோவொரு வகையில் மக்களை ஏமாற்றுவதற்காக பேச்சுக்களில் அரசாங்கத்தை விமர்சிப்பதாகக் காட்டிக் கொண்டு, ஆனால் மிக முக்கியமான இடங்களில் அவர்கள் அரசாங்கத்தை காப்பாற்றுகின்ற கோணத்தில் தான் செயற்பட்டு வருகின்றார்கள்.

குறிப்பாக வரவு – செலவுத் திட்டத்தில் மிகவும் தெளிவாகவே எதிர்க்காமல் இருந்தனர். அதுவும் பாதுகாப்பு அமைச்சில் எதிர்க்காமல் இருப்பதென்பது மன்னிக்க முடியாத குற்றம். ஆனாலும் அந்தளவு தூரத்திற்கு அவர்கள் துணிகின்றார்கள். ஏதோவொரு வகையில் விக்கினேஸ்வரன் கூறியதைப் போல நடுநிலை வகிப்பதன் ஊடாக ஆதரவை கொடுப்பதாக இல்லை என்ற நியாயத்தைச் சொல்லி தப்பிக்க அவர்கள் முயற்சிக்கின்றார்கள். ஆனால் கடந்த 10 வருடத்தில் இவ்வாறான விடயங்களை அனுபவப்பட்டு இருக்கின்ற நிலையில் இவர்களுடைய செயற்பாடுகளை மக்கள் சரியாகப் புரிந்து கொள்வார்கள் என்று நாங்கள் நம்புகின்றோம். – என்றார்.

# சுகாதார முறைகளை மீறிச் செயற்பட்டால் தனிமைப்படுத்தலிலிருந்து விடுவிக்கோம்!



## பொலிஸ் ஊடகப் பேச்சாளர் எச்சரிக்கை

சுகாதார பிரிவினரின் ஆலோசனைக்கமைய செயற்பட்டால் மாத்திரமே தனிமைப்படுத்தப்பட்டுள்ள பகுதிகளை விடுவிக்க முடியும் என்றும் அவ்வாறு இல்லாத பட்சத்தில் விடுவிக்க படமாட்டாது என்றும் பொலிஸ் ஊடகப்பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் றோஹண தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு -

கொரோனா வைரஸ் பரவல் காரணமாக தனிமைப்படுத்தப்பட்டுள்ள பகுதிகளை விட்டு ஒருவரும் வெளியேறக் கூடாது. அவ்வாறு எவரேனும் சென்றால் அவர்களுக்கு எதிராக தனிமைப்படுத்தல் சட்டவிதிகளுக்கமைய கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

இதேவேளை தனிமைப்படுத்தப்படாமல் உள்ள பகுதிகளில் வசிக்கும் மக்களும் தேவையின்றி வீட்டை விட்டு வெளியேறுகின்றமையைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும். அத்தியாவசிய தேவை நிமித்தம் ஒருவர் வீட்டைவிட்டு வெளியேறுவாராயின் தனிமைப்படுத்தல் சட்டவிதிகளை முறையாகப் பின்பற்ற வேண்டியது கட்டாயமாகும்.

சுய தனிமைப்படுத்தல் அல்லது தனிமைப்படுத்தப்பட்டுள்ள வீடுகளில் வசித்து வருபவர்களும் சுகாதார தரப்பினரின் ஆலோசனைகளைக் கடைப்பிடிக்க வேண்டும். இதன்போது வீட்டைவிட்டு வெளியேறுகின்றமையையும் தவிர்த்துக் கொள்ள வேண்டும். இதேவேளை பி.சி.ஆர் மற்றும் அன்டிஜன் பரிசோதனைகளுக்காக அழைப்பு விடுத்தால் அதற்கு எதிர்ப்பு தெரிவிக்காமல், அந்த பரிசோதனைகளுக்கு ஒத்துழைப்பும் வழங்கப்பட வேண்டும்.

இந்நிலையில் தனிமைப்படுத்தப்பட்டுள்ள பகுதிகளில் வசிப்பவர்கள் தொடர்ந்தும் சுகாதாரப் பிரிவினரின் ஆலோசனைக்கமைய செயற்படுவதன் ஊடாக மாத்திரமே அந்தப் பகுதிகளை தனிமைப்படுத்தலிலிருந்து விடுவிக்க முடியும். அவ்வாறு இல்லாத பட்சத்தில் அந்த பகுதிகள் தொடர்ந்தும் தனிமைப்படுத்தப்பட்டுதான் இருக்கும்.

இதேவேளை, மேல்மாகாணத்திலிருந்து வெளியேறும் நபர்களுக்கான அன்டிஜன் பரிசோதனைகள் தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்றன. இந்நிலையில், கடந்த சனிக்கிழமை தொடக்கம், ஞாயிறு காலை வரையில் பெருந்தொகையான அன்டிஜன் பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டதுடன், இதன்போது ஆறு பேருக்கு வைரஸ் தொற்று ஏற்பட்டுள்ளதாக உறுதிச் செய்யப்பட்டது. இதனைத்தொடர்ந்து வைரஸ் தொற்றுக்குள்ளான அனைவரும் சிகிச்சைக்காக வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளமையுடன் அவர்களுடன் நெருக்கமாகப் பயணித்த அனைவரும் தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், முகக்கவசம் அணியாமை மற்றும் சமூக இடைவெளியை பேணாமை தொடர்பில் தொடர்ந்தும் சோதனை நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றமையுடன், அதற்கமைய ஞாயிறு காலை ஆறு மணியுடன் முடிவடைந்த 24 மணித்தியாலயத்திற்குள் 20 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இதேவேளை இந்த சட்டவிதிகளுக்குப் புறம்பாகச் செயற்பட்டனர் எனக் கடந்த ஒக்ரோபர் மாதம் 30 ஆம் திகதி முதல் இது வரையில் 1,611 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

# கிழமையில் ஒரு நாளாவது ஓய்வு தாருங்கள் பி.சி.ஆர். சோதனை வைத்தியர் கோரிக்கை

முகக் கவசங்களை அணிந்து, உங்களைக் காத்துக்கொள்வதன் மூலம் எங்களுக்கு வாரத்தில் ஒரு நாளாவது ஓய்வு தாருங்கள் என பி.சி.ஆர். சோதனைகளில் ஈடுபடும் வைத்தியர் ஒருவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீட பி.சி.ஆர். பரிசோதனைக் கூடத்தில் பணியாற்றும் வைத்தியரான ஆ. முருகானந்தன் தனது விழிப்புணர்வுப் பதிவொன்றின் மூலம் பகிரங்கமாக இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளார். அவர் தனது பதிவில் -

யாழ்ப்பாண மருத்துவ பீடத்தின் கொவிட் - 19 பி.சி.ஆர். பரிசோதனைக் கூடம், கடந்த ஒரு மாதத்தினுள் 2 ஆயிரம் சோதனைகளைக் கடந்து விட்டது.

உங்கள் முகங்களுக்குக் கவசங்களை அணியுங்கள். ஆகக் குறைந்தது ஞாயிற்றுக்கிழமைகளிலாவது எங்களுக்கு ஓய்வு தாருங்கள். - என்று குறிப்பிட்டிருக்கிறார்.

இந்த வைத்தியரும் அவரது மனைவியும் பல்கலைக்கழக மருத்துவ பீட பி.சி.ஆர். ஆய்வு கூடத்தின் ஆரம்ப காலம் முதல் வாரத்தில் ஏழு நாள்களும் ஓய்வின்றிப் பணியாற்றி வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# மட்டு. மரப்பாலம் குளத்தில் நீராட சென்ற இளைஞன் சடலமாக மீட்பு!

மட்டக்களப்பு - கரடியனாறு பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட மரப்பாலம் குளத்தில் நீராடச்சென்ற இளைஞர் சடலமாக கண்டெடுக்கப்பட்டுள்ளார்.

சுவிஸ் கிராமத்தைச் சேர்ந்த 19 வயதுடைய அன்ரன்ராஜ் விதுசன் என்பவரே இவ்வாறு சடலமாக கண்டெடுக்கப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பு சுவிஸ் கிராமத்தில் இருந்து மரப்பாலத்திலுள்ள தனது உறவினர் வீட்டுக்குச் சென்ற இளைஞர், ஞாயிறு மாலை மரப்பாலம் குளத்தில் குளிக்கச்சென்ற வேளை நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

# கொழும்பில் 24 மணித்தியாலங்களில் 253 பேருக்குக் கொரோனா உறுதி!

நாட்டில் கடந்த 24 மணித்தியாலங்களில் அடையாளம் காணப்பட்ட 594 கொரோனா நோயாளர்களுள் பெருமளவானோர் கொழும்பு மாவட்டத்திலேயே பதிவாகியுள்ளனர்.

அதன்படி கொழும்பு மாவட்டத்தில் மாத்திரம் 253 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டதாக கொவிட் -19 கட்டுப்பாட்டு தேசிய செயற்பாட்டு மையம் தெரிவித்துள்ளது.

இந்த நிலையில், கொவிட் - 19 இரண்டாவது அலையின் பின்னர் கொழும்பு மாவட்டத்தில் கொரோனா தொற்றாளர்களின் மொத்த எண்ணிக்கை 16 ஆயிரத்து 109 ஆக உயர்ந்துள்ளது.

அதேநேரம், 124 பேர் கம்பஹா மாவட்டத்திலும், 62 பேர் கண்டி மாவட்டத்திலும், 49 பேர் களுத்துறை மாவட்டத்திலும் அடையாளம் காணப்பட்டனர்.

இரத்தினபுரி மாவட்டத்தில் 16 பேரும், அம்பாந்தோட்டை மாவட்டத்தில் 15 பேரும், திருகோணமலை மாவட்டத்தில் 14 பேரும், மாத்தறை மாவட்டத்தில் 13 பேரும், குருநாகல் மாவட்டத்தில் 12 பேரும் பதிவாகினர்.

மேலும் அம்பாறை மாவட்டத்தில் 8 பேரும், கேகாலை மற்றும் புத்தளம் மாவட்டங்களில் தலா 7 பேரும், காலி மாவட்டத்தில் 6 பேரும், நுவரெலியா மாவட்டத்தில் 3 பேரும், அனுராதபுரம் மாவட்டத்தில் 2 பேரும், மொனராகலை மாவட்டத்தில் ஒருவரும் கண்டறியப்பட்டனர்.

இதேநேரம் வெளிநாடுகளிலிருந்து வருகை தந்த இரண்டு பேருக்கும் தொற்று உறுதியானதாக கொவிட்-19 கட்டுப்பாட்டு தேசிய செயற்பாட்டு மையம் தெரிவித்துள்ளது.

இதன்படி, நாட்டில் இதுவரை கொரோனா வைரஸ் தொற்று உறுதியானவர்களின் மொத்த எண்ணிக்கை 37 ஆயிரத்து 261 ஆக உயர்வடைந்துள்ளதாக அரசாங்கத் தகவல் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. அவர்களில் 28 ஆயிரத்து 267 நோயாளர்கள் சிகிச்சைகளின் பின்னர் குணமடைந்து வைத்தியசாலைகளில் இருந்து வெளியேறியுள்ளனர்.

இதனையடுத்து தொற்றுக்கு உள்ளான 8 ஆயிரத்து 818 பேர் நாடளாவிய ரீதியில் உள்ள வைத்தியசாலைகளில் தற்போது சிகிச்சை பெற்று வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# கல்கிஸை ரயில் நிலையம் சீனர்களுக்கா? அத்தகைய செய்தியில் உண்மை இல்லை!

## பொறுப்பதிகாரிகள் சங்க செயலாளர் கசுன் சாமர தெரிவிப்பு

அரச கரும மொழிகள் ஆணைக்குழுவின் கொள்கைக்கு அமையவே கல்கிஸை ரயில் நிலையத்தில் நேர அட்டவணை உள்ளூர் பயணிகளுக்கு காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. கல்கிஸை ரயில் நிலையம் சீனர்களுக்கு மாத்திரம் என கடந்த காலங்களில் சமூக வலைத்தளங்களில் வெளியான செய்தி பொய்யானது. இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணையை முன்னெடுத்து அரசகரும மொழிகள் ஆணைக்குழு அறிக்கை சமர்ப்பித்துள்ளது என ரயில்வே நிலைய பொறுப்பதிகாரிகள் சங்க பிரதான செயலாளர் கசுன் சாமர தெரிவித்தார். அவர் மேலும் குறிப்பிடுகையில் -

கல்கிஸை ரயில் நிலையத்தில் சீன மற்றும் பிரெஞ்சு மொழியில் காட்சிப்படுத்தப்பட்ட நேர அட்டவணை தொடர்பாக சமூக வலைத்தளங்களில் மாறுப்பட்ட பல கருத்துக்கள் குறிப்பிடப்பட்டன. இந்தச் சம்பவம் தொடர்பாக அரசகரும மொழிகள் ஆணைக் குழுக்கு பொது மக்களிடமிருந்து முறைப்பாடு கிடைக்கப்பெற்றமையைத் தொடர்ந்து கடந்த வாரம் விசாரணை நடவடிக்கைகளை முன்னெடுத்தது.

கல்கிஸை ரயில் நிலையத்தில் அரசகரும மொழிகள் ஆணைக்குழுவின் கொள்கைக்கு அமைய மூன்று அரச மொழிகளிலும் உள்ளூர் பயணிகளுக்காக நேர அட்டவணை காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

கல்கிஸைப் பகுதி பிரதான சுற்றுலாத்தளமாகக் காணப்படுகின்றது. சுற்றுலா மையங்களில் உள்ள ரயில்கள் தனியார் நிறுவனங்களால் அபிவிருத்தி செய்யப்படுகின்றன. குறித்த நிறுவனங்களின் விளம்பரங்கள் ரயில் நிலையங்களில் காட்சிப்படுத்தப்படும். இந்த அடிப்படையில் கல்கிஸை ரயில் நிலையத்தை அபிவிருத்திசெய்த அதிசொகுசு ஹோட்டல் தமது சுற்றுலா பிரயாணிகளுக்காக சீனா மற்றும் பிரெஞ்சு மொழியில் தூர பிரதேச ரயில் சேவை நேர அட்டவணையைக் காட்சிப்படுத்தியது.

வெளிநாடுகளில் இருந்துவரும் சுற்றுலாப்பிரயாணிகள் அனைவருக்கும் ஆங்கில மொழி தெரியும் என எதிர் பார்க்க முடியாது. சுற்றுலாத்துறை சேவையை மேம்படுத்தும் நோக்கில் சுற்றுலா பிரயாணிகளின் தாய் மொழியில் நேர அட்டவணை காட் சிப்படுத்தப்பட்டுள்ளது. ரயில் நிலை யங்களில் தமிழ் மொழியில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள நேர அட்டவணை மற்றும் பெயர் பலகைகளில் எழுத்து பிழை உள்ளது. அவை மாறுப்பட்ட அர்த்தங்களை தோற்றுவித்துள்ளன. - என ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.

தமிழ் மொழியிலான பெயர் பலகைகளில் உள்ள எழுத்து பிழைகளை திருத்த ரயில்வேத் திணைக்கள மட்டத்தில் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஆகவே கல்கிஸை ரயில் சீனர்களின் புகையிரதம் என வெளியான செய்தியில் எவ்வித உண்மை தன்மையும் கிடையாது. ரயில் நிலையங்களில் அரச மொழிகளுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாது. - என்றார்.

# போக்குவரத்துக் கட்டுப்பாடுகளை மிகவும் கடுமையாக்கக் கோரிக்கை!

## பொதுச்சுகாதாரப் பரிசோதகர் சங்கம் விடுத்தது

கொழும்பு, டிசெ.22

நாட்டில் அபாயமுடைய பகுதிகளாக அடையாளங் காணப்பட்டுள்ள இடங்களிலிருந்து ஏனைய பகுதிகளுக்குச் செல்வோருக்கு கடுமையான போக்குவரத்து கட்டுப்பாடுகளை விதிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என இலங்கை பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

கிராம பகுதிகளிலிருந்து நகர் பகுதிகளுக்குச் செல்கின்ற மக்கள் ஆடைக் கொள்வனவு உள்ளிட்டவற்றின் போது எவ்வித பாதுகாப்பு வழிமுறைகளையும் பின்பற்றாமல் செயற்படுகின்றமையை அவதானிக்க முடிகிறதாக சங்கத்தின் தலைவர் உபுல் றோஹண தெரிவித்துள்ளார்.

எனவே அபாயமுடைய பகுதிகளிலிருந்து பயணிக்கும் நபர்களுக்கு கடுமையான போக்குவரத்துக் கட்டுப்பாடு விதிக்கப்பட வேண்டும் என அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதற்கான நடவடிக்கைகளைத் துரிதமாக முன்னெடுக்குமாறு தாம் கோருகிறார் எனவும் குறிப்பாக மேல்மாகாணம் உள்ளிட்ட தம்மால் அடையாளங் காணப்பட்டுள்ள அபாயமுடைய பகுதிகளிலிருந்து பயணிப்பவர்களுக்கு இவ்வாறு போக்குவரத்துக் கட்டுப்பாடு விதிக்கப்பட வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளார்.

அவ்வாறில்லை என்றால் எதிர்வரும் நாள்களில் பாரிய பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க நேரிடும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# சமூக ஊடகங்களை பயன்படுத்துவோரை பதிவு செய்வது அரசின் நோக்கம் அல்ல!

## ஊடக அமைச்சர் கெஹலிய விளக்கம்



சமூக ஊடக ஒழுங்குமுறை தொடர்பாக வெளியாகும் செய்திகள் உண்மையான அர்த்தத்தை தெரிவிக்காமல் மோசமான முறையில் சித்திரிக்கப்பட்டுள்ளன என ஊடகத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

கடந்த ஞாயிறு இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்து தெரிவித்த ஊடகத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல, சமூக ஊடகங்களை பயன்படுத்துவோரை பதிவு செய்வதற்கு விசேட வேலைத்திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்படவுள்ளதாகக் குறிப்பிட்டிருந்தார்.

இந்நிலையில் தனது கருத்துக்களை தெளிவுபடுத்தி திங்கட்கிழமை ஓர் அறிக்கையை வெளியிட்ட அமைச்சர், சமூக ஊடகங்களை பயன்படுத்துவோரை பதிவு செய்வது அரசாங்கத்தின் நோக்கம் இல்லை எனச் சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்தோடு வெளிநாட்டு டிஜிட்டல் செயற்பாட்டாளர்களை பதிவுசெய்வதையே அரசாங்கம் பரிசீலித்து வருகிறது என்றும் கெஹலிய ரம்புக்வெல குறிப்பிட்டுள்ளார்.

இந்த டிஜிட்டல் பன்னாட்டு கூட்டு நிறுவனங்கள் உள்ளூர் வணிகங்களை பெரிதும் பாதிப்பதாகவும் இது நடுத்தர நிறுவனங்களை நேரடியாகப் பாதிக்கிறது என்றும் சுட்டிக்காட்டினார்.

இலங்கையில் உள்ள முன்னணி தொழில் நிறுவனங்களால் வழங்கப்பட்ட தகவல்களின் அடிப்படையில் பரிசீலனைகள் இடம்பெறுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் இந்த வெளிநாட்டு டிஜிட்டல் தளங்கள் மூலம் நாட்டை விட்டு பெரும் தொகை வெளியேறுவதற்கு வழிவகுக்கிறது என்றும் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

## பி.சி.ஆர். பரிசோதனைகள் 11 லட்சத்தைத் தாண்டின!

கொவிட்– 19 நோயாளிகளை அடையாளம் காண ஞாயிறு மாத்திரம் நாட்டில் 10 ஆயிரத்து 534 பி.சி.ஆர். சோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அதன்படி கடந்த பெப்ரவரி 18 ஆம் திகதி முதல் இதுவரையான காலப் பகுதியில் இலங்கையில் மொத்தம் 11 லட்சத்து 13 ஆயிரத்து 199 பி.சி.ஆர். சோதனைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## போலி விசாவினைப் பயன்படுத்தி பிரான்ஸ் செல்ல முயன்றவர் கைது

போலி பிரான்ஸ் வதிவிட விசாவைப் பயன்படுத்தி கட்டார் வழியாக பிரானஸ்'க்கு தப்பிச் செல்ல முயன்றமைக்காக கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து பெண்ணொருவர் குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்கள அதிகாரிகளால் கைதுசெய்யப்பட்டுள்ளார். இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர் வவுனியாவைச் சேர்ந்த 21 வயதுடையவர் ஆவார்.

குறித்த பெண் கடந்த ஞாயிற்றுக்கிழமை கட்டார் ஏயர்வேஸ் விமான நிறுவனத்துக்கு சொந்தமான கியூ. ஆர் - 669 என்ற தோஹா செல்லும் விமானத்தில் புறப்பட விமான நிலையத்துக்கு வருகை தந்துள்ளார்.

அவர் டிக்கெட் கவுண்டருக்கு (கருமபீடம்) வந்தபோது, அவரது பிரான்ஸ் வதிவிட விசா மீது சந்தேகம் கொண்ட விமான நிலைய அதிகாரிகள் அவரைத் தடுத்து வைத்தனர்.

பின்னர் மேலதிக விசாரணைகளுக்காக கட்டுநாயக்க விமான நிலையத்தில் உள்ள குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தின் கண்காணிப்பு பிரிவுக்கு அவரது ஆவணங்களை ஒப்படைத்தனர்.

அவர் சமர்ப்பித்த ஆவணங்கள் தொழில்நுட்ப பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட நிலையில், அவரது பிரான்ஸ் வதிவிட விசா போலியானது என நிரூபிக்கப்பட்டது.

அதன் பின்னர் அதிகாரிகள் அந்தப் பெண்ணிடம் கேள்வி எழுப்பியுள்ளனர். எனினும் அவர்களது கேள்விகளுக்கு முழுமையான பதில்களை அவர் வழங்கவில்லை. அதனால் அவர் குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்கள அதிகாரிகளால் கைதுசெய்யப்பட்டு, மேலதிக விசாரணைகளுக்காக கட்டுநாயக்க விமான நிலையத்தில் உள்ள குற்றப் புலனாய்வுப் பிரிவு அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டார்.



# வீடியோத் தொழில்நுட்பத்தில் மாணவர் கல்வி கற்பதால் கண்கள் பாதிக்கப்படா!

## நடைமுறைகளைச் சரியாகப் பின்பற்ற வேண்டும் கண் சத்திரசிகிச்சை வல்லுநர் எம்.மலரவன் விளக்கம்

“நவீன தொலைத்தொடர்பு சாதனங்களின் திரைகளைப் (Device Screen) பார்த்து மாணவர்கள் கல்வி கற்பதனால் கண்களுக்கு பார்வைப் பாதிப்பு ஏற்படாது. ஆனால் மாணவர்கள் அவற்றைப் பயன்படுத்தும் முறைகளால் கண்களுக்கும் மூளைக்கும் அசௌகரியங்கள் ஏற்படும்.

- இவ்வாறு விளக்கமளித்துள்ளார் கண் சத்திர சிகிச்சை வல்லுநர் முத்துசாமி மலரவன்.

மடிகணினி, அலைபேசி உள்ளிட்ட சாதனங்களில் சூம், ஸ்கைப் உள்ளிட்ட மென்பொருள்களில் நேரலை காணொலி ஊடாக மாணவர்கள் நீண்ட நேரம் கல்வி கற்பதனால் கண்கள் பார்வைப் பாதிப்பு ஏற்படும் என்றும் 20 நிமிடங்களுக்கு ஒருமுறை இடைவெளி விட்டு அவற்றில் பாடநெறியைத் தொடர வேண்டும் என்றும் வெளியாகியுள்ள தவறான தகவல் தொடர்பில் விளக்கமளிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பில் கண் சத்திரசிகிச்சை வல்லுநர் எம்.மலரவன், தெரிவித்தவை வருமாறு:-

நவீன சாதனங்களின் திரைகளில் கல்வி கற்பதனால் மாணவர்களின் கண்களுக்கு பாதிப்பு ஏற்படும் என்ற தவறான - விஞ்ஞான ரீதியாக நிரூபிக்கப்படாத - தகவல்களை வெளியிடுவதன் ஊடாக அச்சம் காரணமாக மாணவர்களின் கல்வி நிலை பாதிக்கும். வடக்கு - கிழக்கு மாகாணங்களின் கல்வி நிலை பின்தங்கிச் செல்லும் நிலையில் இவ்வாறான தகவல்களும் இன்னும் பாதிப்பை ஏற்படுத்திவிடும்.

தற்போதைய உலக ஒழுங்கில் நவீன சாதனங்களின் திரைகளைப் பார்த்து கல்வி கற்பதற்கும் பணிகளை மேற்கொள்வதற்கும் பழக்கப்படுத்திக் கொண்டுள்ளோம். அதுவும் தற்போது உலகில் ஏற்பட்டுள்ள கொவிட் - 19 தொற்று நோய் காரணமாக மாணவர்களின் கல்வி நவீன தொலைத்தொடர்பு சாதனங்களில்தான் இடம்பெறுகின்றன. இந்த நடைமுறை தொடரப் போகின்றது.

எனவே நவீன சாதனங்களின் திரைகளைத் தொடர்ந்து பயன்படுத்தி வருவதனால் கண்கள் பாதிக்கும் என்ற கருத்தை உருவாக்கினால் அது மாணவர்களின் கல்விநிலையைப் பாதிக்கும். அவற்றைப் பயன்படுத்துவதனால் கண்கள் பாதிக்கும் என்ற விஞ்ஞான ரீதியான எந்தத் தகவலும் இல்லை.

ஆனால் நவீன தொலைத்தொடர்பு சாதனங்களை மாணவர்கள் பயன்படுத்தும் முறையில் கண்களுக்கு அசௌகரியங்கள் ஏற்படும். அதாவது கண்கள் எரிவு, வலி, தலையிடி போன்ற அசௌகரியங்கள் இருக்கும்.

> நவீன சாதனங்களின் திரைகளைத் தொடர்ந்து பயன்படுத்தி வருவதனால் கண்கள் பாதிக்கும் என்ற கருத்தை உருவாக்கினால் அது மாணவர்களின் கல்விநிலையைப் பாதிக்கும். அவற்றைப் பயன்படுத்துவதனால் கண்கள் பாதிக்கும் என்ற விஞ்ஞான ரீதியான எந்தத் தகவலும் இல்லை. ஆனால் நவீன தொலைத்தொடர்பு சாதனங்களை மாணவர்கள் பயன்படுத்தும் முறையில் கண்களுக்கு அசௌகரியங்கள் ஏற்படும். அதாவது கண்கள் எரிவு, வலி, தலையிடி போன்ற அசௌகரியங்கள் இருக்கும்.




### கண்களை மூடித் திறக்க வேண்டும்

நவீன தொலைத்தொடர்பு சாதனங்களின் திரைகளில் கல்வி கற்கும் போதும் பணிகளில் ஈடுபடும் போதும் ஒவ்வொரு 5 நிமிடங்களுக்கு ஒரு முறை கண்ணை ஒரு விநாடி மூடித் திறக்க வேண்டும். அதாவது சாதாரணமாக எமது கண்கள் மணிக்கு 12 தொடக்கம் 15 முறை எம்மை அறியாமல் மூடித் திறக்கின்றன. அதனால் கண்கள் சரியாக இயங்குவதற்கான சக்தி கிடைக்கின்றது.

ஆனால் சாதனங்களின் திரையை நாம் தொடர்ச்சியாக அருகாமையில் வைத்து குறும் பார்வையில் பார்ப்பதனால் கண்கள் மூடித் திறப்பது இல்லாமல் போகின்றது. அதனாலேயே சாதனங்களின் திரைகளில் கல்வி கற்கும் போது அல்லது பணியில் ஈடுபடும் போது ஒவ்வொரு 5 நிமிடங்களுக்கு ஒரு முறை கண்களை மூடித் திறக்க வேண்டும்.




### தூரப் பார்வை

நவீன தொலைத்தொடர்பு சாதனங்களின் திரைகளில் கல்வி கற்கும் போதும் பணிகளில் ஈடுபடும் போதும் ஒவ்வொரு 20 நிமிடங்களுக்கு ஒரு முறை கண்களை சுமார் 20 அடி தூரத்துக்காவது தூரப் பார்வை செலுத்தவேண்டும். அல்லது கண்களை மூடிவிட்டுத் திறக்கலாம். அதனால் கண்கள் குறும் பார்வையில் தொடர்ச்சியாக இருப்பதிலிருந்து விடும்.



### ஃப்ளோரா விளக்குகளின் ஒளித் தெறிப்பு

நவீன சாதனங்களைப் பயன்படுத்தும் போது ஃப்ளோரா மின்குமிழ்களின் வெளிச்சம் திரைகளில் பட்டு தெறிப்பு ஏற்படுவதால் கண்களுக்கு கூச்சம் ஏற்படுகின்றது. அதனாலும் கண்களுக்கு அசௌகரியம் ஏற்படுகின்றது. ஆகவே மின்குமிழ்களுக்கு நேராக சாதனத்தின் திரையை வைத்துப் பயன்படுத்துவதனால் கண்கள் கூச்சம் உள்ளிட்ட அசௌகரியங்களுக்கு உள்ளாகின்றன.

எனவே மின்குமிழ்களின் வெளிச்சத்துக்கு எதிர் மாறாக சாதனங்களைப் பயன்படுத்து அவசியமாகின்றது.

### இருக்கைகளில் இருக்கும் விதம்

சாதனங்களைப் பயன்படுத்தும் போது ஆசனங்களில் சரியான முறையில் இருக்கவேண்டும். நிமிர்ந்து கால்களை இலகுவாக விட்டு இருப்பதனால் கண்களுக்கும் மூளைக்கும் சௌகரியமாக அமையும்.

இவ்வாறு நான்கு நடைமுறைகளையும் சீராக பின்பற்றுபவர்களின் கண்களுக்கு எந்தவொரு அசௌகரியங்களும் ஏற்படுவதற்கு வாய்ப்பில்லை.

இவ்வாறு சரியான முறைகளில் சாதனங்களைப் பயன்படுத்தும் போதும் சிலருக்கு தலையிடி உள்ளிட்ட சில அசௌகரியங்கள் 5 சதவீதத்தினருக்கு ஏற்படலாம். அவ்வாறானவர்கள் கண் மருத்துவரிடம் ஆலோசனையைப் பெற்று மூக்குக் கண்ணாடி பயன்படுத்துவது அல்லது முறையான கண் பயிற்சிகளைச் செய்வது நிவாரணமாக அமையும். கண் வறட்சி உள்ளிட்ட பிரச்சினைகள் இருக்கும் போது மருத்துவரால் பரிந்துரைக்கப்படும் செயற்கை கண்ணீரை பயன்படுத்துவதன் ஊடாகவும் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும்.

### கண்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களை தவிர்ப்பதற்கான சில நடைமுறைகள்

ஆசிரியர்கள், மாணவர்களுக்கு பாட நேர அட்டவணை ஒதுக்கீடு செய்யும் போது ஒவ்வொரு பாடத்துக்கும் 40 நிமிடங்களை (உயர்தர மாணவர்களாயின் 45 - 60 நிமிடங்கள்) வழங்குவதுடன் 10 தொடக்கம் 20 நிமிடங்கள் இடைவேளையும் வழங்குவது அவசியம். அந்த இடைவேளையின் போது, மாணவர்கள் தூரப் பார்வை செயற்பாட்டுக்கு இடமளிக்கப்படவேண்டும்.

இதுதொடர்பில் நடைமுறைகளை அறிமுகப் படுத்துவது தொடர்பில் ஆராய்ந்து வருகின்றோம்.

அதன்மூலம் மாணவர்களுக்கு கண்கள் மற்றும் மூளைக்கு ஏற்படும் அசௌகரியங்கள் நீங்கும். இந்த ஒழுங்குமுறையை பெற்றோர்களும் கண்காணிக்க வேண்டும்.

### வெளிப்புறச் செயற்பாடுகளில் ஈடுபடல் அவசியம்

பிள்ளைகள் வீட்டுக்குள்ளேயே தொடர்ச்சியாக இருக்க அனுமதிக்காது வெளிப்புறச் செயற்பாடுகளிலும் கட்டாயம் ஈடுபடுத்தவேண்டும். மைதானங்களில் விளையாடுவது, சூரிய ஒளி உள்ள வேளைகளில் வெளிப்புறங்களில் உடற்பயிற்சி உள்ளிட்ட செயற்பாடுகளில் ஈடுபடுவதனால் கண்களின் தூரப் பார்வை பாதிப்புகள் ஏற்படாது தவிர்க்க முடியும்.

குறைந்தது தினமும் ஒரு மணி நேரம் பிள்ளைகள் மட்டுமல்லாமல் அனைவரும் வெளிப்புறச் செயற்பாடுகளில் ஈடுபடுவது அவசியம். வீட்டுக்குள் அல்லது அலுவலகத்துக்குள் இருந்து பணியாற்றுவதனால் தொடர்ச்சியான குறும் பார்வையே இடம்பெறுகிறது. அதனாலேயே வெளிப்புறச் செயற்பாடுகளில் ஈடுபடுவதனால் தூரப் பார்வை கண்களுக்குக் கிடைக்கிறது.

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் ஒவ்வொரு வீட்டு வளாகத்திலேயே வெளிப்புறச் செயற்பாடுகளுக்கு தேவையான இடவசதிகள் உண்டு.

இலங்கையில் இளம் பராயத்தினர் (முன்பள்ளி, பாடசாலை மற்றும் பல்கலைக்கழக மாணவர்கள்) 100 பேரில் 7 தொடக்கம் 10 பேர் மூக்குக் கண்ணாடி பயன்படுத்துபவராக உள்ளனர். அவர்களுக்கு கண் நோய் இல்லை. எனினும் தூரப் பார்வைக்காக அவர்கள் அதனைப் பயன்படுத்துகின்றனர்.

கொவிட் - 19 நோயால் வீடுகளுக்குள் முடங்கிக் கிடப்பதனால் இந்த சதவிகிதம் அதிகரிக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அதனாலேயே வெளிப்புறச் செயற்பாடுகளில் ஈடுபடுவது அவசியமாகின்றது என்பதை வலியுறுத்துகின்றோம்.

கண்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களுக்கு மருந்துகள் இல்லை. தேவை ஏற்படின் கண்ணாடி அணிவது அல்லது மருத்துவர்களால் பரிந்துரைக்கப்படும் கண்களுக்கான பயிற்சிகளின் ஊடாகவே அவற்றிலிருந்து விடுபட முடியும்.

40 வயதுக்கு மேற்பட்டவர்கள் சாதனங்களின் திரைகளில் அதிக நேரம் பணியாற்றுவதனால் குறும் பார்வைப் பிரச்சினைகள் ஏற்படுகின்றன. அவர்கள் மருத்துவரின் ஆலோசனைக்கு அமைய மூக்குக் கண்ணாடி அணிந்து கொள்வதனால் தலையிடி போன்ற அசௌகரியங்கள் கண்களுக்கு ஏற்படாது - என்றார்.

## கிளிநொச்சி –அறிவியல் நகரில் ரி – 56 ரக துப்பாக்கிகள் 5 சிக்கின

### 30 ரவைகளும் மீட்பு



கிளிநொச்சி – அறிவியல்நகர் காட்டுப் பகுதியில் பயன்படுத்த முடியாத நிலையிலான ரி – 56 ரக துப்பாக்கிகள் மற்றும் ரவைகள் விசேட அதிரடிப்படையினரால் மீட்கப்பட்டுள்ளன.

குறித்த பகுதியில் புதைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில், அண்மையில் பெய்த மழையின் போது அவை வெளியே வந்துள்ளது.

அதைத் தொடர்ந்து இவ்விடயம் தொடர்பில் தகவலறிந்த விசேட அதிரடிப் படையினர் அவற்றை இன்று மீட்டுள்ளனர்.

இதன்போது ரி – 56 ரக துப்பாக்கிகள் 5 மற்றும் ரவைகள் 30 மீட்கப்பட்டுள்ளன. இவை, தமிழீழ விடுதலைப் புலிகள் பயன்படுத்தி இருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகின்றது.

மேலும், மீட்கப்பட்ட பொருள்களை கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றின் அறிவுறுத்தலுக்கு அமைவாக மேற் கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தமிழகத்தில் இருந்து வந்த ஐவர் மன்னார் பொலிஸில்!

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், டிசெ.21

இந்தியாவின் தமிழகத்தில் இருந்து தப்பி வந்த ஐவர் நேற்றைய தினம் மன்னார் கரையை வந்து அடைந்தபோது பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

இலங்கையில் இடம்பெற்ற போரின் காரணமாக படகுகள் மூலம் உயிர் தப்பி இந்தியாவிற்கு ஓடிய ஈழ அகதிகளில் பலர் தம்மை கப்பல் மார்க்கமாக நாட்டிற்கு திருப்பியனுப்புமாறு கோரிக்கை விடுத்து வருகின்றபோதும் இதுவரை அனுப்பி வைக்கப்படாத காரணத்தினால் பலர் படகு மூலமே மீண்டும் நாட்டிற்குள் பிரவேசிக்கின்றனர்.

இவ்வாறு நேற்றைய தினமும் ஓர் படகு மூலம் ஐவர் நாட்டிற்குள் பிரவேசித்துள்ளனர். இவ்வாறு படகில் வந்து இறங்கியவர்களில் முத்துராமு கலைச்செல்வன்



(புத்தளம்), அமாதுல்லா பாத்திமா சுயா (மன்னார் - புத்தளம்), அந்தோணிப்பிள்ளை யுகதாஸ் (சூசையப்பர் கோவிலடி, கோப்பாய் வடக்கு, (தர்மலிங்கம் ஜெயசீலன் (பொல்காவலை), சுமையோன் பிரிஸ் செல்ரன் பீரிஸ் (பூந்தோட்டம், வவுனியா) ஆகிய ஐவருமே இவ்வாறு படகு மூலம் மன்னாரை அடைந்தனர்.

மன்னாரை வந்தடைந்த இந்த ஐவரும் தற்போது மன்னார் பொலிஸ் நிலையத்தில் மேலதிக விசாரணைக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

## இந்தியாவிலிருந்து வந்து திரும்பிய ஈழ அகதி தனுஷ்கோடியில் கைது!

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்,டிசெ.22

இந்தியாவில் இருந்து 2019 ஆம் ஆண்டு படகு மூலம் இலங்கைக்குள் நுழைந்தவர் நேற்றைய தினம் மீண்டும் படகு மூலம் இந்தியாவிற்குத் தப்பிச் சென்றுள்ளார்.

இலங்கையில் நடைபெற்ற இறுதிக் கட்ட போரின் போது தமிழகத்திற்கு அகதியாக வந்து மண்டபம் அகதிகள் முகாமில் தங்கி இருந்த முஜிபூர் ரகுமான் கடந்த 2019 டிசெம்பர் மாதம்

25ஆம் தேதி சட்டவிரோதமாக படகு மூலமா இலங்கைக்கு மீண்டிருந்தார். அவர் இங்கு இலங்கை மன்னார் மாவட்டம் பேசாலையில் தங்கியிருந்துள்ளார்.

இந்தியாவில் இருந்து வந்து ஓர் ஆண்டுக்குள் மீண்டும் சட்ட விரோதமாக கடல் வழியாக படகு மூலம் தனுஷ்கோடி சென்றுள்ளார்.

அங்கு இவரைக் கைது செய்த இந்திய உளவுத்துறை அதிகாரிகள் மண்டபம் முகாமில் வைத்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

## யாழ். மாநகர சபை புதிய மேயர் யார்?

### 30ஆம் திகதி தெரிவு

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் மாநகர சபையின் 2021ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் இரண்டாவது தடவையும் தோற்கடிக்கப்பட்டதைத் தொடர்ந்து, மாநகர சபையின் புதிய மேயர் தெரிவு எதிர்வரும் 30ஆம் திகதி புதன்கிழமை நடை பெறவுள்ளது.

வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் ம. பற்றிக் டிறஞ்சன் இதற்கான அறிவித்தலை விடுத்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆட்சியமைத்துள்ள யாழ்ப்பாணம் மாநகர சபையின் 2021ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் இரண்டாவது தடவையாகக் கடந்த 16ஆம் திகதி, மாநகர மேயர் இம்மானுவல் ஆனோல்ட்டால் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

வரவு - செலவுத்திட்டத்துக்கு ஆதரவாக 21வாக்குகளும், எதிராக 24 வாக்குகளும் அளிக்கப்பட்டதைத் தொடர்ந்து, 3 வாக்குகளினால் அது தோற்கடிக்கப்பட்டது.

இதனால், சட்ட ஏற்பாடுகளுக்கமைய மேயர் ஆனோல்ட் பதவியை இழக்க நேரிட்டது.

இதனைத் தொடர்ந்து யாழ். மாநகர சபைக்குப் புதிய மேயர் ஒருவரைத் தேர்ந்தெடுப்பதற்கான கூட்டம் எதிர்வரும் 30ஆம் திகதி புதன்கிழமை இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, யாழ். மாநகர சபை மற்றும் நல்லூர் பிரதேச சபை என்பவற்றில் ஆட்சியமைப்பது தொடர்பில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியுடனும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியுடனும் (ஈ.பி.டி.பி.) நாம் நேரில் பேச்சு நடத்தவுள்ளோம் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதான பங்காளிக் கட்சியான இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

### ஒரு லட்சம் வேலை வாய்ப்பில்

## வடக்கில் பின்கதவால் நியமனம்!

ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், டிசெ.22

ஒரு லட்சம் வேலை வாய்ப்பில் இரண்டாவது கட்ட நியமனம் வழங்கும் வகையில் உறுதி செய்ய அனுப்பி வைக்கப்பட்டுள்ள பெயர் பட்டியலில் வேலை வாய்ப்பிற்காக முன்னர் விண்ணப்பிக்காத பலரின் பெயர்கள் உள்ளன என அதிர்ச்சித் தகவல் வெளியிடப்படுகின்றது.

நாடு முழுவதும் உள்ள வேலை வாய்ப்பற்ற - அரச தொழில் புரியாத குடும்பங்களில் இருந்து மிகவும் வறுமையானவர்களுக்கு - அரச நியமனம் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டதன் பெயரில் இந்த ஆண்டு ஆரம்பத்தில் விண்ணப்பம் கோரப்பட்டு விண்ணப்பதாரிகளிற்கு நேர்முகத் தேர்வும் இடம்பெற்றது. அதில் கூடிய புள்ளிகளைப் பெற்றவர்கள் நியமனம் கிடைக்கும் என நம்பிக்காத்திருக்கின்றனர்.

இரண்டாம் கட்ட நியமனத்திற்காக பலரின் விண்ணப்பம் செயலணியினால் கடந்த வாரம் மாவட்டச் செயலகங்களிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. இதில் அதிகமானவை புதிய விண்ணப்பங்களாகவே காணப்படுகின்றமையோடு சில பழையவையாகவும் உள்ளன.

இதனால் ஏற்கனவே விண்ணப்பித்து தேர்வில் முதல் நிலை பெற்றவர்கள் ஓரம் கட்டப்பட்டு அரசியல் கட்சிகளின் செல்வாக்குப் பெற்றவர்களின் பெயர் பட்டியல் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

இவ்வாறு அனுப்பிவைக்கப்பட்டுள்ள பெயர் பட்டியல்களில் யாரின் சிபார்சில் வருகின்றன என்பது பென்சிலினால் எழுதப்பட்டே அனுப்பப்படுகின்றது. இவ்வாறு அனுப்பி உள்ள பட்டியல்கள் அரசிற்கு யாழில் ஆதரவளிக்கும் இரு அரசியல் கட்சிகளின் சிபார்சின் பெயரிலேயே புதியவர்கள் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனவாம்.

இதன் காரணமாக ஏற்கனவே விண்ணப்பித்து நேர்முகத் தேர்விற்கு தோற்றிய பலர் ஏமாற்றமடைந்துள்ளனர்.

## வவுனியாவில் வீதியோர வியாபாரத்துக்குத் தடை!

வவுனியா நகரப் பகுதியில் வீதியோர வியாபார நடவடிக்கைகளுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

கொரோனா வைரஸ் தாக்கத்தைக் (முதலாம் பக்கத் தொடர்ச்சி) கருத்தில்கொண்டு வவுனியா நகர சபையில் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

வவுனியா நகரப் பகுதியில் வீதியோர வியாபார நடவடிக்கைகளுக்குத் தடைவிதிப்பதாக நகர சபையால் அறிவிக்கப்பட்ட நிலையில், அதனை மீறி வியாபார



நடவடிக்கையில் ஈடுபட்டவர்களை நகர சபையினர் அகற்றும்படி கோரிக்கை விடுத்துள்ளனர்

இதன்படி வீதியோரங்களில் மரக்கறி வர்த்தக நடவடிக்கைகளுக்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது. (100)

## ஆரம்பப் பிரிவு பாடசாலைகளைத் திறப்பது தொடர்பான கல்வி அமைச்சின் அறிவித்தல்

கொரோனா வைரஸ் தொற்றுப் பரவல் அச்சம் காரணமாக மூடப்பட்டுள்ள முன்பள்ளிகளையும் மற்றும் பாடசாலைகளில் ஆரம்பப் பிரிவு வகுப்புகளையும் மீள ஆரம்பிப்பதற்கு கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

இதன்படி மேல் மாகாணம் மற்றும் தனிமைப்படுத்தப்பட்டுள்ள பிரதேசங்கள் தவிர்ந்த மற்றைய பிரதேசங்களில், எதிர்வரும் ஜனவரி 11 ஆம் திகதி முதல் முன்பள்ளிகளும், தரம் ஒன்று முதல் 5 வரையான ஆரம்பப் பிரிவு பாடசாலைகளும் மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளுக்காகத் திறக்கப்படும் என்று கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

கொழும்பில், இன்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கல்வி அமைச்சர் இதனைக் குறிப்பிட்டார்.

கொரோனாத் தொற்று நிலைமையால் கடந்த ஒக்டோபர் 5 ஆம் திகதி முதல் முன்பள்ளிகளும், அனைத்துப் பாடசாலைகளும் மூடப்பட்டதுடன், அதன்பின்னர் நவம்பர் 23 ஆம் திகதி முதல் மேல்மாகாணம் தவிர்ந்த மற்றைய பிரதேசங்களில் தரம் 6 முதல் 13 வரையான வகுப்பு மாணவர்களுக்காக மாத்திரம் பாடசாலைகள் திறக்கப்பட்டன.

ஆனபோதும் பாடசாலைகள் திறக்கப்பட்ட சில பிரதேசங்களில் கொரோனாத்




தொற்றுப் பரவல் காரணமாக அந்தப் பாடசாலைகள் மீண்டும் மூடப்பட்டுள்ளன.

இது தொடர்பாக இன்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் குறிப்பிட்ட கல்வி அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ்,

தற்போது தனிமைப்படுத்தப்பட்டுள்ள பிரதேசங்கள் மற்றும் மீண்டும் திறக்கப்பட்டு மூடப்பட்ட பாடசாலைகளை மீளத் திறப்பது தொடர்பாக சுகாதார அதிகாரிகளுடன் கலந்துரையாடி வருகின்றோம். இது தொடர்பாக பின்னர் அறிவிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

எவ்வாறாயினும் மேல் மாகாணத்திலுள்ள பாடசாலைகளை இப்போதைக்குத் திறக்க முடியாத நிலைமையே காணப்படுகின்றது - என்றார்.

இதேவேளை, எதிர்வரும் 23 ஆம் திகதி முதல் நாட்டிலுள்ள பாடசாலைகளுக்கு மூன்றாம் தவணை விடுமுறை வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஆயிரம் ரூபா குறித்து இறுதி முடிவு இல்லை; கூட்டு ஒப்பந்தப் பேச்சு மீண்டும் ஒத்திவைப்பு

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கான சம்பளத்தை நிர்ணயிக்கின்ற கூட்டு ஒப்பந்தம் தொடர்பான பேச்சு இன்று தொழில் அமைச்சில் நடைபெற்றது.

கூட்டு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடும் தொழிற்சங்கங்கள் மற்றும் முதலாளிமார் சம்மேளனத்தின் பிரதிநிதிகள் இந்தச் சந்திப்பில் பங்கேற்றிருந்தனர். தொழில் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவும் கலந்துகொண்டார்.

இதன்போது முதலாளிமார் சம்மேளனத்தால் முன்வைக்கப்பட்டுள்ள யோசனையில் தொழிலாளர்களுக்குப் பாதகமாகவுள்ள விடயங்களை நீக்குவது பற்றி விரிவாக ஆராயப்பட்டுள்ளது. ஆனாலும், ஆயிரம் ரூபா சம்பள உயர்வு தொடர்பில் இறுதி முடிவு எதுவும் எட்டப்படவில்லை. இதனால் பேச்சு மீண்டும் டிசெம்பர் 31ஆம் திகதி நடைபெறவுள்ளது.



தமக்கு அடிப்படை நாள் சம்பளமாக ஆயிரம் ரூபா வேண்டும் எனத் தொழிலாளர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். ஆயிரம் ரூபா வழங்கப்பட வேண்டும் என்ற முன்மொழிவை அரசும் முன்வைத்துள்ளது. எனினும், அடிப்படை நாள் சம்பளமாக ஆயிரம் ரூபா வழங்கப்படுமா என்பது பற்றி எதுவும் நடைபெறவில்லை. அதேவேளை, ஆயிரம் ரூபா எவ்வாறு கிடைக்கும் என்பது பற்றி கூட்டு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடும் தொழிற்சங்கங்களும் எதையும் அறிவிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# தோட்டத் தொழிலாளர் சம்பள விவகாரம்: அரசும் கம்பனிகளும் நாடகமாடுகின்றன!

## மலையக பிரதம இணைப்பாளர் கணேசலிங்கம் சுட்டிக்காட்டு



பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கான சம்பள விடயத்தில் அரசாங்கமும், கம்பனிகளும் நாடகமாடுகின்றன. சம்பள விடயத்தில் இழுத்தடிப்புகள் தொடர்கின்றன.

இம்முறையும் அவ்வாறானதொரு நிலைமைக்கு இடமளிக்கமுடியாது என்று '1,000' ரூபாவுக்கான இயக்கத்தின் மலையக பிரதம இணைப்பாளர் கணேசலிங்கம் தெரிவித்தார்.

ஹற்றனில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு இது தொடர்பில் கருத்து வெளியிட்ட அவர் மேலும் தெரிவிக்கையில் –

ஆயிரம் ரூபா வேண்டும் என்ற கோரிக்கை 2015 ஆம் ஆண்டு முதல் விடுக்கப்பட்டுவருகின்றது. தொழிலாளர்களின் இந்தக் கோரிக்கைக்கு ஆதரவாக தொழிற்சங்கங்களும் போராடின. குறிப்பாக கடந்த முறை கூட்டு ஒப்பந்தம் கைச்சாத்திடப்படும்போது எமது இயக்கம் பாரிய அழுத்தங்களைக் கொடுத்திருந்தது. கொழும்பிலும் நாட்டின் ஏனைய பகுதிகளிலும் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

ஆனால் சில தொழிற்சங்கங்கள் தொழிலாளர்களின் போராட்டத்தைக் காட்டிக்கொடுத்துவிட்டு கூட்டு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டன.

தற்போதைய சூழ்நிலையில் தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆயிரம் ரூபா சம்பளம் போதாது. பொருளாதார நிலைமைக்கேற்ப நாளொன்றுக்கு 2 ஆயிரம் ரூபாவுக்கும் மேல் வழங்கப்படவேண்டும்.

ஆனால் 2021 ஆம் ஆண்டு வரப்போகின்றது. அந்த ஆண்டிலும் ஆயிரம் ரூபா பற்றியே பேச வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆயிரம் ரூபா வழங்கப்படும் என்ற ஜனாதிபதியின் உறுதிமொழி நிறைவேற்றப்படவில்லை.

இந்நிலையில் வரவு – செலவுத் திட்டத்தில் ஆயிரம் ரூபா தொடர்பான முன்மொழிவைப் பிரதமர் முன்வைத்துள்ளார். இதற்கு கம்பனிகள் இன்னும் சம்மதம் தெரிவிக்கவில்லை. ஆக சம்பள விடயத்தில் அரசாங்கமும், கம்பனிகளும் நாடகமாடுகின்றன.

இதற்கு எதிராக வீதியில் இறங்கிப் போராடுவதற்கு மக்கள் தயார். ஆனால் கொரோனா நிலைமையால் மௌனம் காக்கின்றோம். இம்முறை தொழிலாளர்களை ஏமாற்றுவதற்கு முயற்சிக்ககூடாது. அவர்களின் கோரிக்கை நிறைவேற்றப்படவேண்டும். அதற்கான எமது அழுத்தம் தொடரும்.– என்றார்.

## முஸ்லிம்களின் சடலம் மாலைதீவில் புதைப்பு வெட்கக்கேடானது என்கிறார் செந்தில்வேல்

முஸ்லிம் மக்களின் சடலங்களை மாலைதீவில் கொண்டுசென்று புதைப்பதற்கு பேச்சு நடைபெறுகின்றது எனக் கூறுகின்றமை வெட்கக்கேடானது என்று புதிய ஜனநாயக மாக்சிசலெனின் கட்சியின் பொதுச்செயலாளர் சி.கா.செந்தில்வேல் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் அனுப்பியுள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு–

கொவிட் 19 தொற்றால் இறந்த – தமது சொந்த நாட்டின் குடிமக்களாகிய – முஸ்லிம் மக்களின் சடலங்களை அவர்களது விருப்பப்படியும் வழக்கப்படியும் புதைப்பதற்கு மறுத்துவரும் அரசாங்கம் மாலைதீவில் கொண்டு சென்று புதைப்பதற்கு பேச்சு நடைபெறுகின்றது என்று கூறுகின்றமை வெட்கக்கேடானதும் அவமானகரமானதுமாகும்.

இத்தகைய நிலைப்பாடு, முஸ்லிம் மக்களுக்கு எதிராகத் தொடரும் பேரினவாத ஒடுக்கு முறையின் நீடிப்பையும் வன்மத்தையும் வெளிப்படுத்துவதாகவே உள்ளது.

ஒரு நாட்டின் அடிப்படை உரிமைகள் அனைத்து குடிமக்களுக்கும் உரியவையாகும். அவற்றைப் பாதுகாத்து நடைமுறைப்படுத்துவது அரசாங்கத்தினது கடமையாகும்.

அந்த வகையில் கொவிட் 19 வைரஸ் தாக்கத்தால் இறக்கும் முஸ்லிம்களின் சடலங்களை அவர்களது மத, பண்பாட்டு அடிப்படையில் புதைப்பதற்கு மறுப்புத் தெரிவித்து மொட்டைக் காரணங்களை கூறி எரியூட்டி வருகின்றமை கண்டனத்துக்குரியதாகும்.

உலக சுகாதார அமையம் கொவிட் 19 தொற்றால் இறந்தவர்களின் சடலங்கள் புதைக்கப்படுகின்றமையால் எவ்வித பாதிப்பும் இல்லை என அறிவித்துள்ளது.

அதனடிப்படையில் உலக நாடுகளில் சடலங்கள் புதைக்கப்பட்டும் வருகின்றன. ஆனால் கோட்டா – மஹிந்த ஆட்சியானது பேரினவாத ஒடுக்குமுறை நிலை நின்று முஸ்லிம் மக்கள் மீதான வன்மத்தை பழிவாங்கலாக முன்னெடுத்து வருவதையே உணர முடிகிறது.

இத்தகைய கட்டாய எரியூட்டலை எமது புதிய ஜனநாயக மாக்சிச லெனின் கட்சி வன்மையாகக் கண்டிக்கிறது. அதேவேளை இதற்கு எதிராக முஸ்லிம் மக்களும் முற்போக்கு அமைப்புக்களும் முன்னெடுத்து வரும் வெள்ளைத் துணிப் போராட்டத்தையும் அமைதிவழி ஆர்ப்பாட்டங்களையும் எமது கட்சி ஆதரிக்கின்றது. என்று அந்த அறிக்கையில் உள்ளது.

## பண்டிகைக் காலத்தில் மதுபான கடைகள் பூட்டு!

### அரச மருத்துவ சங்கம் கோரிக்கை

கிறிஸ்மஸ் மற்றும் புத்தாண்டு காலங்களில் அனைத்து மதுபான கடைகளையும் மூடுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதற்கான நடவடிக்கையை அதிகாரிகள் எடுக்க வேண்டும் என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் பணிப்பாளர் மருத்துவர் ஹரித அளுத்கே கேட்டுக்கொண்டுள்ளார்.

குறித்த தினங்களில் மது அருந்தி பயணத்தில் ஈடுபடுவார்கள் என்பதால் கொரோனா தொற்றுப் பரவும் அபாயத்திலிருந்து மக்களைப் பாதுகாக்க இந்த முடிவு எடுக்கப்பட வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

# இன சமத்துவம், பாதுகாப்பை உறுதிப்படுத்த 'தேசிய இனங்களின் சபை' அவசியமாகும்!

## புதிய அரசமைப்புக்கு சந்திரகுமார் வலியுறுத்தல்

புதிய அரசமைப்பில் தேசிய இனங்களின் சமத்துவத்தையும் பாதுகாப்பையும் உறுதி செய்வதற்குத் 'தேசிய இனங்களின் சபை' அமைக்கப்பட வேண்டும் என்று சமத்துவக் கட்சி தனது முன்மொழிவில் சுட்டிக்காட்டியுள்ளது.

புதிய அரசமைப்பை உருவாக்குவதற்காக அமைக்கப்பட்டுள்ள நிபுணத்துவக்குழுவுக்கு சமத்துவக்கட்சியின் பொதுச்செயலாளர் மு.சந்திரகுமார் அனுப்பி வைத்துள்ள முன்மொழிவிலேயே இவ்வாறு சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அத்துடன் அனுப்பி வைக்கப்பட்டுள்ள முன்மொழிவில் குறிப்பிடப்பட்டுள்ள முக்கிய விடயங்கள் வருமாறு:–

உருவாக்கப்படவுள்ள அரசமைப்பானது, இலங்கை பல்லின இனங்கள் வாழும் நாடு என்ற அடிப்படையில் பன்மைத்துவத்தைப் பேணும் வகையிலான பொறிமுறைகளைக் கொண்டதாக அமைய வேண்டும். மொழி, சமயம், மானுடவியல் அடையாளங்களுடனான சமூகங்களின் தனித்துவம் அங்கீகரிக்கப்பட்டு, தேசிய சமூகங்களாக அவை உறுதி செய்யப்பட வேண்டும். மக்களின் அடிப்படை உரிமைகள் உள்ளிட்ட ஜனநாயக விழுமியங்களைப் பேணும் வகையில் இருக்க வேண்டும்.

மேலும், புதிய அரசமைப்பானது இலங்கையில் நீண்டகாலமாக நிலவும் இனப் பிளவை முடிவுக்குக் கொண்டு வரும் வகையிலும் நாட்டின் ஜனநாயக விழுமியங்களைப் பேணும் வகையிலும் அமைய வேண்டும். இன, மத, மொழி, பிரதேசம் என்ற பேதங்களில்லாத ஆட்சிக் கட்டமைப்பைக் கொண்டிருக்க வேண்டும்.

மதம், மொழி, பிரதேசம், பால் சார்பின்மைக்கு இடமளிக்காத வகையில் சமத்துவமும் சமூக நீதியும் பேணப்படுதல் அவசியம். இலங்கையில் வாழும் அனைத்துத் தேசிய இனங்களும் தமது தாய் மொழியில் நிர்வாக விடயங்களை ஆற்றக் கூடிய பொறிமுறைக்கு இடமளிக்கப்படுதல் அவசியம். தொகுதி வாரியான பிரதிநிதித்துவத்துக்கு மேலதிகமாக எண்ணிக்கைச் சிறுபான்மைத் தேசிய இனங்களின் பிரதிநிதித்துவம் போன்ற கலப்பு முறைப் பிரதிநிதித்துவக் கட்டமைப்பும் அதற்கான ஒதுக்கீட்டுக்கும் இடமளிக்கப்படல் வேண்டும்.

பெண்களின் பிரதிநிதித்துவத்துக்கான பால்நிலைச் சமத்துவத்துக்கும் பங்கேற்புக்கும் இடமளிக்கும் வகையில் அவர்களுக்கான ஒதுக்கீடு உள்ளூராட்சி சபைகளில் மூன்றில் ஒன்றாகவும் மாகாணசபைகளில் நான்கில் ஒன்றுக்கு அதிகமாகவும் நாடாளுமன்றத்தில் ஐந்தில் ஒன்றுக்குக் கூடுதலாகவும் ஒதுக்கீடு உறுதி செய்யப்படுதல் வேண்டும்.

மனித உரிமைகளின் அடிப்படை அம்சங்கள் அனைத்தும் உறுதி செய்யப்பட்டு அவை நடைமுறைக்குரிய பொறிமுறையில் உத்தரவாதப்படுத்தப்பட வேண்டும். அத்துடன் அரசமைப்பில் கூறப்படும் விடயங்கள் அனைத்தும் தெளிவான பொருள்கோடலில் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றில் சமனிலையில் வெளிப்படுத்தப்படுதல் வேண்டும்.

மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் சபையில் மக்கள் நலனின் அடிப்படையில் மக்கள் நலன், தேச நலன் ஆகியவற்றுக்கமைய சட்டவாக்கமும் சட்டத்திருத்தங்களும் செய்யப்படுதல் வேண்டும். சட்டத்தின் முன்னே அனைவரும் சமம் என்ற அடிப்படையில் எந்த வகையான முன்னுரிமை அளித்தல்களும் தவிர்க்கப்பட்டு, பாரபட்சமின்மை பேணப்படுதல் வேண்டும்.

அரசமைப்பில் கிடைக்கப்படும் வரப்பிரசாதங்கள் அனைவருக்கும் கிடைக்கும் வகை செய்தல் அவசியம். ஆட்சிக் கட்டமைப்புக்கான பிரதிநிதிகளை மக்கள் சுயாதீனமான முறையில் தெரிவுசெய்வதற்கான உத்தரவாதமுடைய தேர்தல்கள் உரிய கால ஒழுங்கில் நடத்தப்படுவது கட்டாயம்.

ஜனாதிபதியை மக்கள் தேர்தல் மூலமாகத் தெரிவு செய்தல் மற்றும் நாடாளுமன்றத் தேர்தல் விகிதாசார முறைப்படி நடத்தப்படுதல் உள்ளிட்ட முக்கிய விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

## மைத்திரி தரப்பினருக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி அழைப்பு விடுத்துள்ளது.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது, 'பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் செயற்பாடுகள் தொடர்பில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அதிருப்தியில் இருக்கின்றது. எனவே, அக்கட்சி உறுப்பினர்களையும் அரவணைத்துக் கொண்டு பயணிக்கும் எண்ணம் உள்ளதா?' என ஊடகவியலாளர்களால் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே நாடாளுமன்ற உறுப்பினர் எரான் விக்கிரமரத்ன மேற்கண்டவாறு அழைப்பு விடுத்தார்

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

ஐக்கிய மக்கள் சக்தி என்பது எமது கட்சி. ஐக்கிய மக்கள் முன்னணி என்பது எமது கூட்டணி. எனிவே, எமது கட்சியின் கொள்கையுடன் ஒத்துப்போகக்கூடிய எந்தக் கட்சியும், அமைப்புகளும், நபர்களும் இணைந்து பயணிக்கலாம்.

கதவுகள் திறந்தே உள்ளன. ஐக்கிய தேசியக் கட்சியின் மீதான அதிருப்தியால் அக்கட்சியிலிருந்து வெளியேறியவர்களுக்கும் அழைப்பு விடுக்கின்றோம். ஐக்கிய தேசியக் கட்சிகூட வரலாம். ஆனால், எமது கட்சியின் கொள்கைகள் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் – என்றார்.

அதேவேளை, 'ஐக்கிய மக்கள் சக்தியின் சம்மேளனக் கூட்டத்தில் ஏன் பங்காளிக் கட்சிகளின் தலைவர்கள் பங்கேற்கவில்லை?' என எழுப்பப்பட்ட கேள்விக்கு, பங்காளிக் கட்சிகளின் தலைவர்களுக்கு அழைப்பு விடுத்திருந்தோம். எனினும், கூட்டம் பதுளையில் நடைபெற்றதால் அவர்களால் பங்கேற்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டது. மற்றும்படி எவ்வித பிரச்சினையும் இல்லை – என்று பதிலளித்தார்.

# உருவாகிறது திருகோணமலை கொத்தணி; கொரோனாத் தொற்றாளர் திடீர் அதிகரிப்பு

திருகோணமலை நகர் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டவர்களது எண்ணிக்கையில் திடீர் அதிகரிப்பு ஏற்பட்டுள்ள நிலையில் திருகோணமலை கொத்தணி உருவாகும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

கொரோனத்தொற்றின் மூன்றாவது அலை பேலியகொட மீன்சந்தையுடன் தொடர்புபட்டு திருகோணமலையில் கணிசமான தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டிருந்த போதிலும் அதன் பின்னர் நீண்ட நாள்களாக புதிய தொற்றாளர்கள் எவரும் அடையாளம் காணப்பட்டிருக்கவில்லை.

இந்நிலையில் நேற்றுமுன்தினம் ஒரே நாளில் 21 பேருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதன் காரணமாக திருகோணமலை கல்வி வலயத்துக்குட்பட்ட அனைத்துப் பாடசாலைகளும் நேற்று முதல் மறு அறிவித்தல் வரை மூடப்பட்டுள்ளன என்று கிழக்கு மாகாண ஆளுநர் அறிவித்துள்ளார்.

ஏற்கனவே கிழக்கு மாகாணத்தில் அக்கரைப்பற்று மரக்கறிச் சந்தை கொத்தணி உருவாகி அம்பாறை மாவட்டத்தில் நூற்றுக்கணக்கான தொற்றாளர்கள் அடையாளம் கணப்பட்டு வருகின்றனர்.

யாழ்ப்பாணத்திலும் மருதனார்மடம் பொதுச்சந்தைக் கொத்தணி உருவாகி இதுவரை 90 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

திருகோணமலையிலும் ஒரே நாளில் 21 புதிய தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளமை திருகோணமலை கொத்தணியின் தோற்றுவாயாக மாறும் அபாய நிலையின் அறிகுறியாகவே நோக்கப்படுகின்றது.

ஆகவே, பொதுமக்கள் அனைவரும் சுகாதாரப் பாதுகாப்பு நடைமுறைகளைக் கடைப்பிடிப்பதன் மூலமே இந்த அபாய நிலையைக் கடந்து செல்ல முடியும் எனச் சுகாதாரத் துறையினர் தொடர்ந்தும் வலியுறுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## வவுனியா நகரப் பாடசாலைகளின் கல்வி நடவடிக்கைகள் மீள ஆரம்பம்


மாணவர் வரவு குறைவு

வவுனியா நகரில் கொரோனா வைரஸ் தொற்றுடன் மாணவர் அடையாளம் காணப்பட்ட நிலையில் தற்காலிகமாக மூடப்பட்ட பாடசாலைகளின் கல்வி நடவடிக்கைகள் நேற்று முதல் வழமைக்குத் திரும்பியுள்ளன. இருப்பினும் மீள ஆரம்பிக்கப்பட்ட பாடசாலைகளில் மாணவர் வரவு குறைவாகவே காணப்பட்டது.

சுகாதார அதிகாரிகளின் ஆலோசனைக்கமைவாக வவுனியா தெற்கு கல்வி வலயத்துக்குட்பட்ட வவுனியா இலங்கை திருச்சபை தமிழ் கலவன் பாடசாலை, வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம், இறம்பைக்குளம் மகளிர் கல்லூரி, காமினி மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகள் தற்காலிகமாக மீள் அறிவித்தல் வரை மூடப்பட்டிருந்தது.

வவுனியா வைத்தியசாலைக்குச் சென்ற நிலையில் எழுமாறாக மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் நகரப் பகுதி பாடசாலை ஒன்றில் கல்வி கற்கும் வவுனியா, கற்குழி, முதலாம் ஒழுங்கையைச் சேர்ந்த 15 வயது மாணவி ஒருவருக்குத் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டது.

இதையடுத்து நகரப் பாடசாலைகள் நான்கும் தற்காலிகமாக மூடப்பட்டமையுடன், குறித்த மாணவியுடன் தொடர்புடையவர்களிடம் பி.சி.ஆர். பரிசோதனையும் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இந்நிலையில், சுகாதார அதிகாரிகளின் அறிவுறுத்தலின் பிரகாரம் மீண்டும் நேற்று திங்கட்கிழமை முதல் வவுனியா நகரப் பாடசாலைகள் நான்கும் திறந்து கல்விச் செயற்பாடுகளை வழமை போன்று முன்னெடுக்கப்பட்டன. இருப்பினும் பாடசாலைகளில் மாணவர் வரவு மிகக் குறைவாகவே காணப்பட்டது. (100)

## மேல் மாகாணத்தில் எகிறும் தொற்றாளர் எண்ணிக்கை!

### மூன்றாம் அலையில் 27,032 பேர் பாதிப்பு

கொரோனா வைரஸின் மூன்றாம் அலையின் தாக்கத்தால் கடந்த ஒக்டோபர் 4 ஆம் திகதி முதல் நேற்று வரை மேல் மாகாணத்தில் 27 ஆயிரத்து 32 பேருக்கு வைரஸ் தொற்றியுள்ளது.

நாட்டில் நேற்று முன்தினம் அடையாளம் காணப்பட்ட 594 தொற்றாளர்களில் 426 பேர் மேல் மாகாணத்தைச் சேர்ந் தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

கடந்த ஒக்டோபர் 4 ஆம் திகதி முதல் நேற்று வரை கொழும்பு மாவட்டத்தில் 16 ஆயிரத்து 109 பேருக்கும், களுத்துறை மாவட்டத்தில் 2ஆயிரத்து 617 பேருக்கும், கம்பஹா மாவட்டத்தில் 8 ஆயிரத்து 306 பேருக்கும் இவ்வாறு வைரஸ் தொற்றியுள்ளது.

அத்துடன் மேல் மாகாணத்திலேயே அதிகளவு உயிரிழப்பு சம்பவங்களும் பதிவாகியுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

## கொரோனா உயிரிழப்பு ஜனவரியில் அதிகரிக்கும்!

### அரச மருத்துவ சங்கம் ஆரூடம்

ஜனவரி மாதத்தில் நாட்டில் கொரோனா வைரஸால் உயிரிழப்பவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

மேலும் நோயாளர்களின் எண்ணிக்கையும் அதிகரிக்கும் என அந்தச் சங்கத்தின் மருத்துவர் ஹரித அலுத்கே தெரிவித்துள்ளார்.

இதன்காரணமாக முதியோர் இல்லங்களை உரியமுறையில் நிர்வகிக்கவேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

இதன் மூலம் முதியோர் இல்லங்களில் வைரஸ் பரவுவதை தடுக்கவேண்டும் எனவும் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் மருத்துவர் ஹரித அலுத்கே மேலும் தெரிவித்துள்ளார்.

## வெளிநாடுகளிலிருந்து 77 பேர் நாடுதிரும்பினர்!

கொரோனா தொற்று பரவல் காரணமாக வெளிநாடுகளில் சிக்கித்தவித்த மேலும் 77 இலங்கையர்கள் திங்கட்கிழமை காலை நாடு திரும்பியுள்ளனர்.

அதன்படி சவூதி அரேபியாவிலிருந்து 52 பேரும் கட்டாரிலிருந்து 25 பேரும் திங்கள் காலை கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தனர் என கொவிட்-19 தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையம் தெரிவித்துள்ளது.

இவ்வாறு நாட்டை வந்தடைந்த அனைவருக்கும் பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

அதன்பின்னர் அவர்கள் அனைவரும் தனிமைப்படுத்தல் நடவடிக்கைகளுக்காக அனுப்பி வைக்கப்பட்டனர்.

அண்ணா
விரைவுப் பொதிகள் சேவை
3-6 நாட்கள்
077 8889388
075 3305500
070 3305500
யாழ்ப்பாணம் கிளிநொச்சி வவுனியா
சங்கானை முல்லைத்தீவு மல்லாவி
கல்வியங்காடு புதுக்குடியிருப்பு மன்னார்
ஆவரங்கால் கனகராயன்குளம் கொழும்பு
நெல்லியடி சங்கத்தானை பளை
லண்டன் 1050/=
பிரான்ஸ் டென்மார்க் பெல்ஜியம் ஜேர்மனி நெதர்லாந்து சுவிஸ் 1150/=
Whatsapp No - 076 1221566

கல்யாணமாலை
வட சர்வதேச திருமண சேவை
மணமகன் விவரம்
பிறந்த திகதி - 1983.09.12
மதம் - இந்து K
நட்சத்திரம் - விசாகம் 3
செவ் - ------
பாவம் - 51 1/4
கல்வி - Bsc பட்டதாரி
தொழில் - வைத்தியசாலை(M.A)
எதிர்பார்ப்பு - படித்த அழகான அரச தொழில் பெண்
மணமகள் விவரம்
பிறந்த திகதி - 1992.04.01
மதம் - இந்து K
நட்சத்திரம் - பூரட்டாதி 1
பாவம் - 61 1/4
செவ் - 01இல்
கல்வி - பட்டதாரி
தொழில் - -------
எதிர்பார்ப்பு - அரச உத்தியோகம்
Kalyanamalai Vada.com தினசரி முகநூலிலும், யாழ் காலைக்கதிர் பத்திரிகையில் காலையிலும் மாலையிலும் வெளிவரும் மணமக்களை நீங்களே தெரிவு செய்து எம்முடன் தொடர்புகொள்ள நாம் திருமணத்தை நிறைவேற்றித் தருவோம். மணமக்கள் விண்ணப்பப் படிவத்தினை புத்தகக் கடைகளிலும், பத்திரிகை விற்பனை நிலையங்களிலும் வாங்கி விண்ணப்பியுங்கள், முக நூலிலும் விண்ணப்பம் உண்டு. அலுவலக நேரம் காலை 9 தொடக்கம் 5 வரை. சனி, ஞாயிறு மற்றும் போயா தினங்களில் பதிவுகளை மேற்கொள்ள முடியும்.
பதிவுக் கட்டணம் 1000 + 300.
க.இல - 8000661351 வர்த்தக வங்கி, பருத்தித்துறை.
உப அலுவலகம், சந்தை வீதி, இமையாணன் மேற்கு, உடுப்பிட்டி.
077 3434 415
077 8578 528

பசுமை PASUMAI
பசுமை உயிரியல் கூட்டுப்பசளை
பச்சை இலைகள், தாவர கழிவுகள், கரி ஆகிய மூலப்பொருட்களால் தயாரிக்கப்பட்டது.
விலங்குக் கழிவுகள் அற்றது.
சாதாரண கூட்டுப்பசளைகளை விட மிக மிக அதிகமான நுண்ணுயிரிகளையும் தாவர போசனை மூலகங்களையும் தன்னகத்தே கொண்டது.
போசனை உள்ளடக்கம்:
சேதன காபன் 25.7 25%
நைதரசன் (தவர்ச்சத்து) N 2.0 3.5%
பொசுபரசு (மணிச்சத்து) P 0.5 1.0%
பொட்டாசியம் (சாம்பல்சத்து) K 0.2 0.6%
Ca, Mg, Mn, Zn, Fe, Cu
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
021 492 7778 pasumailanka@gmail.com www.pasumai.lk facebook.com/pasumaingri

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 22.12.2020 இல் வெளியிடப்பெற்றது.

# 23

## ஆவது இதழ் வெளிவந்து விட்டது

அனைத்து முகவர்களிடமும் கேட்டு வாங்குங்கள்



செம்மணி

# நான் எதையும் மறைக்கவில்லை மனம் திறக்கிறார் சத்தியமூர்த்தி

சத்தியப் பிரேம்

மருதனார்மடம் கொத்தணி நடந்தது என்ன

போன்ற விவரங்களுடன்

சூடான அரசியல் மற்றும் சமூகம் சார் கட்டுரைகளுடன்

வாசகர்களின் நன்மதிப்பைப் பெற்ற பல்சுவை வார இதழ்

SOORYA

# சிறந்த 10 ஆக்கங்களுக்கு SOORYA நத்தார் பரிசுப் பொதிகள்!!

இந்த பண்டிகைக் காலத்தில் சூர்யாவிடமிருந்து 4,000 ரூபா பெறுமதியான பரிசுப்பொதிகளை வெல்லுங்கள்!!

நீங்கள் செய்ய வேண்டியது:- fb.com /Sun Match

1. எமது சூர்யா *Sun Match Facebook page* ஐ *Like* செய்து போட்டிக்கான *Post* ஐ உங்களது *timeline* இல் *Share* செய்யுங்கள்.

2. சூர்யா மெழுகுவர்த்திகளைக் கொண்டு நீங்கள் தயாரித்த அலங்காரத்தைப் புகைப்படமெடுத்து அதனை எமது *page* இல் *comment* செய்யுங்கள் (சூர்யா மெழுகுவர்த்திப் பெட்டி யொன்று அருகில் தெரியும் விதமாக புகைப்படமெடுக்கவும்).

3. அதில் 5 நண்பர்களை *Tag* செய்யுங்கள்.





தெரிவு செய்யப்படும் 10 வெற்றியாளர்களுக்கு அவர்களது இல்லங்களுக்கே பரிசுப்பொதிகள் அனுப்பி வைக்கப்படும்.

போட்டி முடிவுத் திகதி **30.12.2020**

சூர்யா மெழுகுவர்த்திகள் 2 அளவுகளில் கிடைக்கின்றன.

மேலதிக விபரங்களுக்கு 0773598440 என்ற இலக்கத்தை தொடர்புகொள்ளவும்.

காலைக்கதிர் Kalaikkathir

# பெரும்பொருளை நினைக்கவைக்கும் பீடுடைய மார்கழி!

மகாதேவஐயர் ஜெயராமசர்மா
(மெல்பேண், ஆஸ்திரேலியா.
மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்)

மார்கழி மாதத்தைப் பீடை பிடித்தமாதம் என்று சொல்லி, சுபநிகழ்ச்சிகள் செய்வதைத் தவிர்த்துவிட்ட நிலையினைக் காண்கின்றோம். இது பற்றிய விளக்கத்தை நாம் அறிந்து கொள்ளுதல் அவசியமானதே.

பல பெயர்கள் காலத்தின் போக்கால் கருத்து மாறுபட்டு வேறு ஒரு பொருளை உணர்த்துவது நடந்தே வந்திருக்கிறது."ஒப்பிலி அப்பன்" என்னும் சுவாமியின் பெயரை உப்பிலி அப்பன் என மாற்றி,அந்த சுவாமிக்கு உப்பில்லாத பொருள்களையே நிவேதனம் செய்யும் வழக்கம் நாளடைவில் ஏற்பட்டுவிட்டது.

அதே போன்றதே மார்கழி மாதம் பற்றியதுமாகும்.பீடுடைய மாதம் என்பது பீடை உடைய மாதமாக்கப்பட்டு விட்டது.பீடு என்றால் பெருமையானது, உயர்வானது என்பது பொருளாகும்.



திருவாதிரை நட்சத்திரம் "ஆருத்ரா" என சமஸ்கிருதத்தில் வழங்கப்படுகின்றது. சிவனையும் ஆதிரையான் எனக் குறிப்பிடும் வழமையும் எமது சமயத்தில் இருக்கிறது. மார்கழியில் வரும் திருவாதிரை நட்சத்திரத்துக்கு முந்திய பத்து நாள்களும் திருவெம்பாவையாகக் கருதி திருவாதிரை இடம்பெறும் பத்தாம் நாளை ஆருர்த்தா தரிசனம் எனப் போற்றி சிவனை வழிபடும் வழக்கமும் இந்த மார்கழிக்கே உரியது என்பதும் முக்கியமானதாகும். அதுமட்டுமல்ல சம்பந்தப் பெருமான் அவதாரம் செய்தமை கூட மார்கழித் திருவாதிரை என்றும், சேந்தனார் திருப்பல்லாண்டு பாடி அசையாத தேரை அசையச் செய்து சிவனது தேரினை வலம்வரச் செய்ததும் மார்கழித் திருவாதிரை என்றும், வியாக்கிரபாதர், பதஞ்சலி ஆகிய சிவனருள் பெற்ற முனிவர்களுக்குச் சிவன் தனது அருட் கூத்தினை நிகழ்த்திக் காட்டியதும் கூட மார்கழித் திருவாதிரையில்தான் என்றும் அறியக் கிடக்கின்றது. இந்த வகையிலும் மார்கழி மாதம் முக்கியத்துவம் மிக்கதாகவும் கொள்ளப்படுகின்றது.

மனிதர்களுக்கு ஒரு வருடம் என்பது தேவர்களுக்கு ஒரு நாளாகும். தை முதல் ஆனி மாத இறுதி வரை பகல். ஆடி முதல் மார்கழி மாத இறுதிவரை இரவு. இந்த இறுதியானது தேவர்களுக்கு விடியற்காலமாகும். இதனால் மார்கழி என்பது தேவர்களின் விடியற்பொழுதாக இருப்பதால் அக்காலங்களில் காலையில் எழுந்து குளித்து, அனைவரும் பூஜை வழிபாடுகளை ஆற்றுவது மிகவும் நலனை விளைவிக்கும் என்பது நம்பிக்கையாகும். இதனால்தான் மார்கழி மாதம் தேவ காரியங்களுக்கு என்று ஒதுக்கப்பட்டது.

இந்தக் காலத்தில்தான் மார்கழி நோன்பும் வருகிறது. மணிவாசகப் பெருமானின் திருவெம்பாவையும் பாடப்படுகிறது. ஆண்டாளின் திருப்பாவையும் பாடப்படுகிறது. திருப்பள்ளி எழுச்சியும் பாடப்படுவதும் குறிப்பிடத்தக்கது. தேவர்களுக்கு மட்டுமே உரிய மாதத்தில் வேறு எந்தவிதச் சிந்தனைகளுக்கும் இடம் கொடுக்கும் வண்ணம் ஏனைய விஷயங்களைச் செய்தல் தவிக்கப்பட்டதே அன்றி மார்கழி கூடாதது என்பதற்காகவோ மார்கழி பீடை பிடித்தது என்பதற்காகவே அல்ல என்பதை நாங்கள் யாவரும் நன்கு விளங்கிக் கொள்ளுதல் மிகவும் அவசியமாகும்.

மாதங்களிலே நான் மார்கழி என கண்ணன் பகவத் கீதையில் சொல்லுவதை மனத்தில் கொண்டால் மார்கழியின் மகத்துவம் யாவருக்கும் விளங்கி விடும். வடமொழியில் 'மார்கசீர்மம்' என்று மார்கழி மாதம் அழைக்கப்படுகிறது. மார்க்கம் என்றால் வழி என்பது பொருள். சீர்மம் என்றால் உயர்ந்த என்பது பொருள்.எனவே மார்கழி என்பது உயர்வுடையது என்பதை வடமொழியும் கூட எடுத்துக் காட்டுகிறது அல்லவா?

திருவண்ணாமலையில் மணிவாசகரால் பாடப்பட்டது தான்'திருவெம்பாவை. திருவெம்பாவைப் பாடல்கள் அனைத்துமே கன்னிப் பெண்களால் பாடப்படும் விதத்தில் அமைக்கப் பட்டிருக்கின்றன. இப்படியாகப் பாடும் பாடல் வகைகள் சங்ககாலத்திலேயே இருந்திருக்கின்றன.



பரிபாடல், நற்றிணை, ஐங்குறுநூறு, கலித்தொகை ஆகிய சங்ககால நூல்களில் மார்கழி நோன்பு பற்றிய செய்திகள் இடம்பெறுகின்றன. இங்கு பாவை நோன்பு பற்றிய செய்திகளையும் காண்கின்றோம்.எனவே மணிவாசகப் பெருமானின் பாவையர் பற்றிய இந்த வகையானது முந்தியும் இருக்கலாம் அல்லது பிந்தியதாகவும் இருக்கலாம் என்ற கருத்தும் இலக்கிய ஆராய்ச்சியாளரிடம் காணப்படுகின்றது. எது எப்படி இருப்பினும், மார்கழி நோன்பு என்பது திருவெம்பாவையுடன் இணைகின்றது என்பதே முக்கிய செய்தி எனலாம்.

திருவாசகத்துக்கு உருகாதார் ஒரு வாசகத்துக்கும் உருகார் என்பது எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டதாகும். மேல்நாட்டிலிருந்து இந்தியா வந்த டாக்டர் ஜி.யூ.போப் என்னும் ஆங்கிலேயரின் மனத்தைத் தொட்டதே இந்தத் திருவாசகம்தான். தனது மனதைப் பறிகொடுத்த திருவாசகத்தை ஆங்கில மொழியில் மொழிமாற்றம் செய்தார் என்பதை யாவரும் அறிகின்றோம்.அந்த அளவுக்கு ஆத்மாவையே உருக்கி ஆண்டவனின் நினைப்பை ஊட்டவல்லது திருவாசகம் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை என்பது எல்லோரதும் அவிப்பிராயமாகும்.

அந்தத் திருவாசகத்துக்குள் அமைந்திருப்பதுதான் திருவெம்பாவை ஆகும். விடியற்காலையிலே எழுந்த கன்னிப்பெண்கள் வீடுதோறும் சென்று இறைவனது பெருமையினை எடுத்துச் சொல்லி இன்னும் ஏன் நித்திரை செய்கின்றாய், விரைவாக எழுந்துவா, எல்லோரும் நீராடி இறைவனது புகழை ஏத்திப் பாடுவோம் என்று பக்தி ததும்ப அழைக்கும் விதத்தில் அமைந்ததுதான் திருவெம்பாவை என்பது குறிப்பிடத்தக்கது.

திரு + எம் + பாவை என்பது திருவெம்பாவை ஆகும். தெய்வத்தை நோக்கிய பக்தி நிலையில் நின்று பாடும் பாடல்கள் என்பதே இதன் அர்த்தம் எனவும் கொள்ளலாம். ஒவ்வொரு பாடலின் முடிவிலும் ஏலோர் எம்பாவா என்றே முடிகின்றதைக் காண்கின்றோம். இதனைப் பாவைப் பாட்டு என்றும் நீராட்டுப் பாட்டு என்றும்



குறிப்பிடுவார்கள்.

இளம்பெண்கள் தங்களுக்கு நல்ல கணவர் அமைய வேண்டும் எனக் கருதி மார்கழி மாதத்தில் நோன்பு நோற்பது வழக்கம். இந்தப் பெண்கள் அதிகாலை எழுந்து இறைவனது புகழைப்பாடி நீராடச் செல்லும் போது திருவெம்பாவை பாடல்களைப் பாடிச்சென்றுள்ளனர் என்பதையே இங்கு நாம் எடுத்துக் கொள்ள வேண்டியுள்ளது. இதற்கு ஆண்டாள் நாச்சியாரின் திருப்பாவையும் சான்றாகி நிற்கிறதெனலாம்.

இதனால்தான் சைவத்தலங்களில் திருவெம்பாவையும் வைஷ்ணவத் தலங்களில் திருப்பாவையும் மார்கழி மாதத்தில் பாடப்பட்டு வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

முதல் நான்கு பாடல்களும் அதிகாலையில் நீராடப் புறப்பட்ட பெண்கள் இன்னும் நித்திரைவிட்டு எழாத தமது தோழியரை எழுப்புவதாக, அதற்கு அப்பெண்ணானவள் மறுமொழி கூறுவதாகவும் அமைந்திருக்கின்றது.

> திருவாசகத்துக்கு உருகாதார் ஒரு வாசகத்துக்கும் உருகார் என்பது எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டதாகும். மேல்நாட்டி லிருந்து இந்தியா வந்த டாக்டர் ஜி.யூ.போப் என்னும் ஆங்கிலேயரின் மனத்தைத் தொட்டதே இந்தத் திரு வாசகம்தான். தனது மனதைப் பறிகொடுத்த திருவாசகத்தை ஆங்கில மொழியில் மொழிமாற்றம் செய்தார் என்பதை யாவரும் அறிகின்றோம்.

ஐந்தாம் பாடல் தொடக்கம் எட்டாம் பாடல் வரை உள்ளன நித்திரை விட்டெழும் பெண்கள் கூறும் விதமாக இருக்கின்றன.

ஒன்பதாம் பாடல் முதல் இருபதாம் பாடல் வரை நித்திரை கலைந்த பெண்கள் இறைவனைத் துதித்துப் பாடும் வகையில் அமைந்திருக்கின்றன.

"ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்சோதி", "மாலறியா நான்முகனும் காணா மலையினை", "என்னானை என் அரையன் இன்னமுது என்று எல்லோமும் சொன்னோம் கேள்", "கேழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணை", "முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருளே – பின்னைப் புதுமைக்கும் போர்த்தும் அப்பெற்றியனே", "இவ்வானும் குவலயமும் எல்லோரும் – காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடி", "வேதப் பொருள் பாடி அப்பொருளாம் மாபாடி சோதி திறம்பாடி சூழ்கொன்றைத் தாழ்பாடி ஆதித் திறம்பாடி அந்தமாம் மாபாடிப் பேதித்து", "விண்ணாகி மண்ணாகி இத்தனையும் வேறாகிக் – கண்ணார் அமுதமுமாய் நின்றான்" என்று திருவெம்பாவைப் பாடல்கள் – எல்லாம் வல்ல இறைவனைப் பற்றிப் பெண்கள் பாடிப் பரவுவதாக எமக்கொல்லாம் விளக்கி நிற்கின்றது எனலாம்.

(17 ஆம் பக்கம் பார்க்க...)

# தொல்லியல் பயிற்சிப் பாடசாலை பிரதமரால் திறந்துவைக்கப்பட்டது!





கொழும்பு, டிசெ.22

பேராசிரியர் சேனக பண்டாரநாயக்க தொல்லியல் பயிற்சி பாடசாலை, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவால் மக்கள் பாவனைக்காகக் கையளிக்கப்பட்டது.

மத்திய கலாசார நிதியத்தால் சீகிரிய தொல்பொருள் வளாகத்தில் நிர்மாணிக்கப்பட்ட பேராசிரியர் சேனக பண்டாரநாயக்க தொல்லியல் பயிற்சி பாடசாலை, பிரதமரும், புத்தசாசன சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சருமான மஹிந்த ராஜபக்ஷவால் ஞாயிற்றுக்கிழமை மக்கள் பாவனைக்காகக் கையளிக்கப்பட்டது.

50 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட பயிற்சி பாடசாலையின் ஊடாக புதிய தொல்பொருள் ஆராய்ச்சியாளர்களுக்கான குடியிருப்பு வசதிகளுடன் நடைமுறை மற்றும் கோட்பாட்டு ரீதியிலான ஆய்வுகளை முன்னெடுப்பதற்கு வாய்ப்பளிக்கப்படும்.

திறன்கள் மற்றும் அணுகுமுறைகள் நிறைந்த சிரேஷ்ட தொல்பொருள் ஆய்வாளர்களை உருவாக்கும் அபிலாயையுடன் இந்த தொல்லியல் பயிற்சி பாடசாலை மத்திய கலாசார நிதியத்தின் சீகிரியா திட்டத்தில் நிறுவப்பட்டுள்ளது.

ஒழுக்கமான தொல்பொருள் ஆராய்ச்சியாளர்களை உருவாக்கும் நோக்கத்துடன் இந்த தொல்லியல் பயிற்சி பாடசாலை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

உள்ளூர் மற்றும் வெளிநாட்டு தொல்பொருள் ஆராய்ச்சியாளர்களுக்கு தங்களது தொல்பொருள் பணிகளை முன்னெடுப்பதற்காக இந்த பயிற்சி பாடசாலை திறக்கப்பட்டுள்ளது.



பேராசிரியர் சேனக பண்டாரநாயக்க, தொல்லியல் துறையில் சுற்றுச்சூழல் தொல்லியல், குடியேற்ற தொல்லியல், மானுடவியல் தொல்லியல் மற்றும் பண்டைய கள தொல்லியல் ஆகிய துறைகளின் முன்னோடியாவார்.

சீகிரியா திட்டத்தின் ஸ்தாபக தொல்பொருளியல் பணிப்பாளராக விளங்கியவரும் இவராவார்.

சர்வதேச பல்கலைக்கழகங்களுடன் இணைந்து பலதரப்பட்ட அடிப்படையில் தொல்பொருள் ஆராய்ச்சியைத் தொடங்கியமையின் விளைவாக சீகிரியாவின் அரச நகர்ப்புற அம்சங்களை அடையாளம் காணுவதற்கும், சூழல் மற்றும் தொழிற்சாலைகளை அடையாளம் காணவும், அங்கு வாழ்ந்த மக்களின் குடியிருப்பு முறையை அடையாளம் காணவும், அதன்மூலம் தொழில்நுட்ப நிபுணத்துவத்தை ஆய்வு செய்யவும் வாய்ப்பு கிடைத்தது.

இந்தத் திறப்பு விழாவில் அமைச்சர் ஜனக பண்டார தென்னகோன், இராஜாங்க அமைச்சர் விதுர விக்ரமநாயக்க, நாடாளுமன்ற உறுப்பினர்களான பிரமித பண்டார தென்னகோன், ரோஹன குமார திசாநாயக்க, மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ கமகே, தம்புள்ள மேயர் ஜாலிய ஓபான, புத்தசாசன சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில குணவர்தன உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# பொலன்னறுவை ரஜமஹா விகாரை புனித பூமியாக பிரகடனப்படுத்தல்!

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில், பொலன்னறுவை வரலாற்று சிறப்புமிக்க சொலஸ்மஸ்தான ரஜமஹா விகாரை புனித பூமியாக பிரகடனப்படுத்தப்பட்டது.

பொலன்னறுவை வரலாற்று சிறப்புமிக்க சொலஸ்மஸ்தான ரஜமஹா விகாரையை புனித பூமியாக பிரகடனப்படுத்தி சன்னஸ் பத்திரம் கையளிக்கும் புண்ணிய நிகழ்வு புத்தசாசன சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரும், பிரதமருமான மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் கடந்த (ஞாயிற்றுக்கிழமை) கல்கே விகாரை உத்தராராமவில் இடம்பெற்றது.

முதலில் சமய வழிபாடுகளில் ஈடுபட்ட பிரதமரால் சியம் மஹா நிகாயவின் அஸ்கிரி பீட அனுநாயக்கர், பொலன்னறுவை சொலஸ்மஸ்தானாதிபதி கண்டி அஸ்கிரிய பீடத்தின் கெடிகே ரஜமஹா விகாராதிபதி அதிவணக்கத்திற்குரிய வெடறுவே ஸ்ரீ உபாலி அனுநாயக்க தேரரிடம் சன்னஸ் பத்திரம் கையளிக்கப்பட்டது.

அதிவணக்கத்திற்குரிய வெடறுவே ஸ்ரீ உபாலி அனுநாயக்க தேரர் உள்ளிட்ட மஹா சங்கத்தினரால் இதன்போது பிரதமர் மற்றும் அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்களை ஆசிர்வதிக்கும் வகையில் பிரித் பாராயண நிகழ்வொன்றும் முன்னெடுக்கப்பட்டது.

தற்போதைய அரசாங்கத்தின் சுபீட்சத்தின் நோக்கு கொள்கையை விளக்கும் வகையில், பௌத்தத்தை முன்னுரிமையாகக் கருதி, ஆன்மீக ரீதியில் நல்லொழுக்கமுள்ள சமூகத்தை உருவாக்குவது மற்றும் இலங்கையின் வரலாற்று பாரம்பரியத்தை எதிர்கால தலைமுறையினருக்குப் பாதுகாத்து அர்ப்பணிக்கும் நோக்கத்துடன் பொலன்னறுவை வரலாற்று சிறப்புமிக்க சொலஸ்மஸ்தான ராஜமஹா விகாரை இல 2201/2 என்ற அதிவிசேட வர்த்தமானி ஊடாக புனித பூமியாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

அங்கு சியம் மஹா நிகாயவின் அஸ்கிரி பீட அனுநாயக்கர், பொலன்னறுவை சொலஸ்மஸ்தானாதிபதி கண்டி அஸ்கிரி பீட கெடிகே ரஜமஹா விகாராதிபதி அதி வணக்கத்திற்குரிய வெடறுவே ஸ்ரீ உபாலி அனுநாயக்கர் தேரர் மற்றும் இராஜாங்க அமைச்சர் ரொஷான் ரணசிங்க ஆகியோரால் பிரதமருக்கு நினைவுப் பரிசொன்று வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வில் இராஜாங்க அமைச்சர்களான ரொஷான் ரணசிங்க, ஸ்ரீபால கம்லத், நாடாளுமன்ற உறுப்பினர் அமரகீர்த்தி அத்துகோரள, புத்தசாசன சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில குணவர்தன உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# சுகாதார விதிமுறைகளை மீறியவர்களுக்கு எதிராக வவுனியாவில் நடவடிக்கைகள்!







வவுனியா, டிசெ.22

வவுனியாவில் சுகாதார விதிமுறைகளை மீறியவர்களுக்கு எதிராக பொலிஸார் கடுமையான நடவடிக்கையினை மேற்கொண்டு வருகின்றனர்.

இலங்கையில் கொரோனா இரண்டாவது அலை வேகமெடுக்க தொடங்கியுள்ளமையை அடுத்து, அதனைக் கட்டுப்படுத்தும் முகமாக பொலிஸாரால் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

அதற்கமைய திங்கட்கிழமை வவுனியா நகர்பகுதிகளில் முகக்கவசம் அணியாமல் மோட்டார் சைக்கிள்களில் செல்பவர்கள், சுகாதார முறைகளை உரிய முறையில் பின்பற்ற தவறியவர்களுக்கு எதிராக பொலிஸார் நடவடிக்கை மேற்கொண்டனர்.

# அமரர் பேனாட் மதுரநாயகம் நினைவுக்

# கவிதைப் போட்டி

## போட்டி 2 பிரிவுகளாக நடைபெறும்

1. பாடசாலை மாணவர்களுக்கானது (தரம் 1 முதல் 12 வரை)
"கை கழுவினார்கள்....."

2. பெரியவர்களுக்கானது (வயது எல்லை கிடையாது)
"முகத்தின் முகவரிகளைத் தொலைத்தோம்...."

## பரிசுத் தொகை:

| பாடசாலை மணவர்களுக்கு | பெரியவர்களுக்கு |
|---|---|
| 1ம் பரிசு – 3000/= | 1ம் பரிசு – 5000/= |
| 2ம் பரிசு – 2000/= | 2ம் பரிசு – 3000/= |
| 3ம் பரிசு – 1000/= | 3ம் பரிசு – 1000/= |

- 30 வரிகளுக்கு உட்பட்டதாக இருத்தல்.
- புதுக்கவிதையாக / மரபுக்கவிதையாக இருக்கலாம்.
- நிச்சயம் சுயமாக வரைந்த, தனது சொந்த கையெழுத்துடன்
- அனுப்பிவைக்க வேண்டும்.

**நோக்கம் : -**

காலச் சூழ்நிலையில் விடுமுறைப்பொழுதில் மனதை ஒருமுறை மகிழ்விக்க

**இறுதித் திகதி: - 31.12.2020**

போட்டி முடிவுகள் 14.01.2021 பொங்கல் தினத்தன்று
காலைக்கதிர் பத்திரிகையில் வெளியிடப்படும்.

உங்கள் ஆக்கங்களை எமக்கு தபால் மற்றும் மின்னஞ்சல் ஊடாக அனுப்பிவைக்கவும்.

**ஆக்கங்கள் அனுப்பவேண்டிய முகவரி**

தபால் :-
அமரர் பேனாட் நினைவுக் கவிதைப்போட்டி
காலைக்கதிர்
இல. 30, கல்லூரி வீதி,
யாழ்ப்பாணம்.
மின்னஞ்சல் :- kalaikkathiredu@gmail.com

# சுற்றுலாப் பயணிகள் விடயத்தில் கடுமையான கொவிட் விதிமுறை

## சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே தெரிவிப்பு



விமான நிலையங்கள் மீண்டும் திறக்கப்படவுள்ள நிலையில் சுற்றுலாப் பயணிகளுக்கு கொரோனா தொற்று உறுதியானால் 14 நாள்கள் தனிமைப்படுத்தலில் முடித்த பின்னரே நாட்டுக்குள் அனுமதிக்கப்படுவார்கள்.

விமான நிலையத்தில் கடந்த (ஞாயிற்றுக்கிழமை) மேற்கொண்ட கண்காணிப்பு விஜயத்தை அடுத்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த ஆரம்ப சுகாதார மற்றும் கொரோனா கட்டுப்பாடு தொடர்பான இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே இவ்வாறு கூறினார்.

வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் தனிமைப்படுத்தல் நடைமுறைகளைப் பின்பற்றுவதை அவதானிப்பதற்கும் அவர்களுக்கு பரிசோதனைகளை மேற்கொள்வதற்குமான திட்டங்கள் விமான நிலையத்தில் உள்ளன எனவும் அவர் தெரிவித்தார்.

தனிமைப்படுத்தல் காலமான 14 நாள்கள் நிறைவடைந்தமையைத் தொடர்ந்து, சுற்றுலாப் பயணிகள் தமது சுற்றுலா தொடர்பான செயற்பாடுகளில் ஈடுபட முடியும் என்றும் இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே குறிப்பிட்டார்.

# சமூக ஊடகங்களைப் பதிவு செய்ய கோருவது கருத்துச் சுதந்திரத்துக்கான ஒடுக்குமுறையே!

## அம்பிகா சற்குணநாதன் தெரிவிப்பு



நாட்டில் சமூக ஊடகங்களைப் பயன்படுத்துவோரை பதிவுசெய்யும் நடவடிக்கை மக்களின் கருத்து சுதந்திரத்தின் மீதான ஒடுக்குமுறை என மனிதஉரிமை ஆர்வலர் அம்பிகா சற்குணநாதன் தெரிவித்துள்ளார்.

கருத்துச் சுதந்திரத்துக்கு எதிரான ஒடுக்குமுறை இருக்கக்கூடும் என்பதை இது காட்டுகின்றது எனக் குறிப்பிட்டுள்ள அவர், சமூக ஊடகங்களைப் பயன்படுத்துவோரை பதிவு செய்ய அரசாங்கம் ஏன் விரும்புகிறது என்றும் கேள்வியெழுப்பியுள்ளார்.

இதேவேளை கருத்து சுதந்திரம் மற்றும் அரசாங்கத்தை விமர்சிக்கும் மக்கள் மீது கட்டுப்பாடுகளை வைப்பதற்கான முதல் படியாக இந்த நடவடிக்கை அமைந்துள்ளதாகவும் அம்பிகா சற்குணநாதன் கவலை வெளியிட்டுள்ளார்.

கடந்த (ஞாயிற்றுக்கிழமை) இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்து தெரிவித்த ஊடகத் துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல, சமூக ஊடகங்களை பயன்படுத்துவோரை பதிவு செய்வதற்கு விசேட வேலைத்திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்படவுள்ளதாகக் குறிப்பிட்டிருந்தார்.

சமூக ஊடகங்களைப் பயன்படுத்துவோர் மத்தியில் சுயக்கட்டுப்பாட்டை ஏற்படுத்துவதே இதன் நோக்கம் என்றும் முகப்புத்தகம் உள்ளிட்ட சமூக ஊடகத்தை பயன்படுத்துவோரை பதிவு செய்ய நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் அவர் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# சுகாதார நடைமுறைகளை பேணாததால் பருத்தித்துறையில் 2 கடைகளுக்கு சீல்!

சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றாமல் தனிமைப்படுத்தல்சட்டத்தை மீறியதாக இரண்டு வர்த்தக நிலையங்கள் பருத்தித்துறை நகர பொதுச்சுகாதார பரிசோதகரால் சீல் வைத்து மூடப்பட்டன.

பருத்தித்துறை நகரில் உள்ள புடைவைக் கடை ஒன்றும் அழகுசாதனப் பொருள் விற்பனை நிலையம் ஒன்றுமே இவ்வாறு திங்கட்கிழமை மூடப்பட்டன.

மேல் மாகாணத்துக்குச் சென்று திரும்பிய உரிமையாளர்கள், சுகாதார மருத்துவ அதிகாரிக்கு அறிவித்தல் வழங்காமல் சுகாதார நடைமுறைகளை மீறி, வர்த்தக நிலையங்களை திறந்து வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டதாலேயே அவை மூடப்பட்டன.

# ஒரு லட்சம் பேருக்கு வேலை வாய்ப்பு: மட்டக்களப்பில் நேர்முகப் பரீட்சை!

மட்டக்களப்பு, டிசெ. 22

வறிய குடும்பங்களைச் சேர்ந்த ஒரு லட்சம் இளைஞர், யுவதிகளுக்கு வேலைவாய்ப்பு வழங்கும் வேலைத் திட்டத்துக்கு அமைவாக 574 பணியாளர்களை இணைத்துக் கொள்ளவதற்கான நேர்முகப் பரீட்சை மட்டக்களப்பில் திங்கட்கிழமை முதல் நடைபெற்று வருகின்றது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் 'சுபிட்சத்தின் நோக்கு' தேசிய கொள்கைப் பிரகடனத்துக்கு அமைவாக இந்தத் திட்டத்தின் கீழ் மட்டக்களப்பு மாவட்டத்தில் 822 பேர் இணைத்துக்கொள்ளப்படவுள்ளனர் என மாவட்ட செயலாளரும் அரசாங்க அதிபருமான கே.கருணாகரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் முதல் கட்டமாக 248 பேர் இணைத்துக் கொள்ளப்பட்டு அவர்களுக்கான ஆறு மாதகால பயிற்சி நெறிகள் இடம் பெற்று வருகின்றன.

இவர்களுக்கான பயிற்சிகளை பலநோக்கு அபிவிருத்தித் திணைக்களம் தொடர்ச்சியாக வழங்கி வருகின்றது.

இந்த நிலையில், இதன் இரண்டாங் கட்டமாக 574 பணியாளர்களை இணைத்துக்கொள்ளவதற்கான நேர்முகப் பரீட்சை மட்டக்களப்பில் திங்கள் முதல் நடைபெற்று வருகின்றது.

இந்நேர்முகப் பரீட்சையில் தெரிவு செய்யப்படுவோருக்கான ஆறு மாத பயிற்சி நெறி தொடர்ச்சியாக பலநோக்கு அபிவிருத்தி திணைக்களத்தால் வழங்கப்படவுள்ளது.

இதுதவிர இவ்வாறு மாத பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்யும் பணியாளர்கள் இந்த மாவட்டத்திலுள்ள பிரதேச செயலகங்கள், உள்ளூராட்சி சபைகள் மற்றும் திணைக்களங்களில் இணைத்துக்கொள்ளப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கம்பஹா வைத்தியசாலையில் கொவிட் தீவிர சிகிச்சை பிரிவு

கொரோனா நோயாளிகளுக்கு சிகிச்சையளிக்க கம்பஹா மாவட்ட பொது வைத்தியசாலையில், தீவிர சிகிச்சை பிரிவை நிறுவ நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த புதிய பிரிவு உலக வங்கியின் உதவியுடன் சுமார் 22 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்படும் என வைத்தியசாலை பணிப்பாளர் வைத்தியர் சமன் பத்திரன தெரிவித்துள்ளார்.

இலங்கை விமானப்படையின் 70 ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு சமூக சேவையாக இலங்கை விமானப்படையின் 45 உறுப்பினர்களின் உழைப்புடன் இந்த தீவிர சிகிச்சை பிரிவின் கட்டுமான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

குறித்த பிரிவின் கட்டுமான பணிகள், இரண்டு வாரங்களில் நிறைவு செய்து, எதிர்வரும் ஜனவரி முதலாம் திகதி திறப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் வைத்தியர் சமன் பத்திரன குறிப்பிட்டுள்ளார்.

# பெரும்பொருளை...

(14 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

திருவெம்பாவையும் திருப்பாவையும் மார்கழியில் அதிகாலை நேரத்திலே பாடும் வகையில் அமைக்கப்பட்டிருக்கின்றன.

ஏற்கனவே முதலில் சுட்டிக் காட்டப்பட்டபடி தேவர்களின் காலைப்பொழுதாக இருப்பது ஒரு முக்கிய காரணம் என்பதை நம்பிக்கை எனக் கொள்வோம். அதற்குப் பின்னும் பல காரணங்களும் இருக்கின்றன என்பதும் முக்கியமானதாகும்.

அதிகாலையில் துயில் எழுவது என்பதே ஆரோக்கியத்துக்கு அடிப்படை அல்லவா? அதுவும் மார்கழியில் அதிகாலை துயில் எழுந்து நீராடுவது என்பது உடல் ஆரோக்கியம் சம்பந்தப்பட்டதாகும். மார்கழியில் ஏற்படும் காலநிலை மாற்றமானது உடல் ஆரோக்கியத்துக்கு உகந்தது என்று எமது முன்னோர்கள் அறிந்து வைத்திருந்தனர். அதனை அறிவுரை ஆக்கினால் யாவரும் புறந்தள்ளியும் விடக்கூடும் என்பதால் அதனை திருவெம்பாவையுடன் இணைத்து விட்டனர் என்றே எண்ண வேண்டியிருக்கிறது.

அதிகாலையில் விழித்தால் புத்தி தெளியும். உடம்பில் இரத்தத்தில் நல்ல மாற்றம் ஏற்படும். நரம்புகள் உற்சாகம் பெறும். பித்தம் தணியும். வாத, பித்தம் சமனிலை அடையும். இவையெல்லாம் ஆரோக்கியம் சம்பந்தமானவை. இவையாவுமே திருவெம்பாவையினுள் அடங்கி இருக்கின்றன என்பதே இங்கு மிகவும் இன்றியமையாத விடயமாகும் என்பதை அறிதல் வேண்டும்.

தமிழ்ப் பண்பு, அன்புணர்வு, ஒழுக்க நிலை, சமய மரபு, ஆத்மஞானம் அத்தனையும் திருவெம்பாவால் எமக்குக் கிடைக்கின்றன் என்பதை யாவரும் உணர்ந்து கொள்ளுதல் வேண்டும்.

வெறுமனவே திருவெம்பாவைப் பாடாமல் அதனூடாக எங்களுக்குக் கிடக்கும் அரிய பெரிய விடயங்களை அறிந்து கொண்டு கோவிலில் பாடுவோமேயானால் நிச்சயம் திருவெம்பா எமக்கெல்லாம் பெரும் பயன் உடையாதாகவே இருக்கும்.

வைகறைப் பொழுதை பிரம்ம முகூர்த்தம் என்று குறிப்பிடுவதையும் நாம் நோக்குதல் வேண்டும்.

மார்கழியை பகவத்கீதை போற்றுகின்றது. மார்கழியில்தான் ஆருர்த்தா தரிசனம் நடக்கின்றது. மார்கழியில் தான் சுவர்க்க வாசல் ஏகாதசி உற்சவமும் இடம்பெறுகிறது. சைவர்களுக்கும் வைஷ்ணவர்களுக்கும் உகந்த தெய்வீக மாதமாக மார்கழி திகழ்கிறது என்பதையும் மனத்தில் கொள்ளுதல் முக்கியமானதே. திருவெம்பாவையும், திருப்பாவையும், இறைவன் புகழ் சேர்ப்பதற்கு மார்கழியில்தான் கோவில்கள் தோறும் பக்தியுடன் பாடப்படுகின்றன என்பதும் மிகவும் முக்கிய கருத்து என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. எனவே மார்கழியில் இறைவன் புகழ்பாடி எங்களின் வாழ்வு வளம்பெறப் பணிவோம்.